# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.



| மாலை 1 | ஞாயிறு 12-3-39 வெகுதான்யஹு மாசிமீ 29உ | முத்து 24 |
|---|---|---|


## பொருள் அடக்கம்

விஷயம் பக்கம்


1. திருபுரி காங்கிரஸ் ... 658
2. குறிப்பு ... 660
3. போகிற போக்கில் ... 661
4. வார நடப்பு ... 663
5. பருவப் பிறப்பு (ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன்) ... 664
6. பூவுடன் நாரும் (ஸ்ரீ. ஸ. சேதுராமன்) ... 665
7. திருட்டு பயம் ("கிருஷ்ணகுமாரி") ... 668
8. அரசியல் வாதிகள் ("வஸந்தன்") ... 670
9. தோப்போரம் (ஸ்ரீமதி செல்லம்) ... 672
10. பெற்ற மனம் ("கேஸரி") ... 674
11. இல்லொளி ("துகப்ரியை") ... 676
12. சிறுவர் பகுதி (ஸ்ரீ. கே. வேங்கடராமன், பி. ஏ.) ... 681
13. மிருக சிகிச்சை (ஸ்ரீ. எஸ். ராமஸ்வாமி) ... 683
14. கடிதம் (ஸ்ரீ. ரங்கநாதன்) ... 684
15. வலை வீச்சு ... 686


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# திருபுரி காங்கிரஸ்

திருபுரியில் இந்த வாரம் பருப்பில்லாமல் கலியாணம் நடக்கிறது. ஆங்கிலம் படித்தவர்கள் 'ஹாம்லட்' இல்லாமல் 'ஹாம்லட்' நாடகம் நடக்கிறதென்பார்கள். ஆனால் நமக்கு தாய் பாஷையின் பழமொழிகளின் சுவையே சுவை—புல்லில் வளர்ந்த பசுவின் பாலைப்போல்.

மகாத்மா காந்தி தென் ஆப்ரிகாவிலிருந்து இந்தியாவுக்கு திரும்பி வந்தது முதல், தான் நேரில் இருந்து நடத்தி வைக்காத காங்கிரஸ் இதுதான். ஆனால் அவர் உபவாச வெற்றியின் பலனை திருபுரி காங்கிரஸ் நிச்சயம் அடையும். ராஜகோட்டில் நெருக்கடி வலுத்து, மகாத்மாஜியின் உபவாசம் வெற்றியடையாமல் காலதாமதப்படுமோவென்று விசனித்து, சற்று முந்தித்தான் பயந்து, நயந்து "போகிற போக்கில்" ஈசனை வேண்டி எழுதினேன். அதை அச்சிட்ட மைகூட இன்னும் காயவில்லை. போகிற போக்கில் வேண்டிய வேண்டுகோளுக்குக்கூட ஈசன் அருள் புரிவார்போலிருக்கிறது. கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாலும் பக்தியோடு செய்தால் கொஞ்சம் புண்ணியந்தானே? மனமார்ந்து சரணமடையவேண்டியதுதானே வேண்டுகோளின் முக்கிய நோக்கம்? உண்ணாவிரதமும் அதன் கொள்கையும் ஈசனுக்கு தன்னையே அர்ப்பணமாக அளிக்கிறது தானே?

கன்னியாகுமாரி முதல் ஹிருஷீகேசம் வரையில் சென்ற ஐந்து நாட்களாய் எங்கும் கவலை தேங்கி நின்றது. மகாத்மா உண்ணாவிரதம்எடுத்துவிட்டாரே! வெற்றியடையாமல் அதை ஒருக்காலும் கலைக்க மாட்டாரே! மத்திய சர்க்காரோ, நிலத்தில் ஊரும் ஆமையைவிட மெதுவாய் நகரும் நடையை பழக்கத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்களே! சிறு சிகப்பு கொடி ஒட்டியபன்னிரண்டு 'டை' களைப்பார்த்து, துருப்புப்போல் பத்தி பத்தியாக எழுதி வைத்திருக்கும் இருபத்திநான்கு 'நோட்டு' களையும் படித்துப்பார்த்து, பேனாவை மூக்கில் கொஞ்சநேரம் வைத்துவிட்ட பிறகல்லவோ தீர்மானத்திற்கு வருவது வழக்கம்! இதற்கெல்லாம் உண்ணாவிரதத்தில் காலமெங்கே? தவிர, நமது ராஜப்ரதிநிதி லார்ட் லின்லித்சோ ஆர அமரப் பார்த்து, தீர்க்க ஆலோசனைசெய்து ஒரு தீர்மானத்திற்கு மெதுவாய் வரக்கூடிய மனப்பான்மை உள்ளவரே. அரசியலில் உண்ணாவிரதத்தின் போக்கையும், மகிமையையும்ஆங்கிலர்கள் அறிந்தவர்களல்லவே. ஒப்புக்கொண்டவர்கள் அல்லவே. மேலும் இவருக்கு அதில் நம்பிக்கைக்குறைவு உண்டே. இதில் காரியம் மோசம் போய்விடுமோ? எதிர்பாராத கலக்கமும், குழப்பமும் அதிகரிக்குமோ? கிணறுவெட்டப் பூதம் புறப்படுமோவென்று எல்லோரும் பயந்தோம்.

ஆனால் தான் திட்டம்போட்ட பிரயாணத்தைக்கூட விட்டுவிட்டு உடனே டில்லிக்குத் திரும்பிவந்து மகாத்மாவிற்கு சமாதானம் அளித்ததற்கு நாம் நம்முடைய மனமார்ந்த வந்தனத்தை ராஜப்பிரதிநிதிக்கு தெரிவிக்கிறோம். எல்லா மாகாண காங்கிரஸ் மந்திரி சபைக்கும் பிரதம மந்திரிகளுக்கும் நம்முடைய வந்தனம். ராஜகோட் நெருக்கடி உடனே தீராவிட்டால் அவர்கள் 'ராஜீனாமா கொடுத்து விடுவோம்' என்று தந்திமூலம் வைஸிராயுக்கு விட்ட அறிக்கை தான் பரபரப்பையும், சுறுசுறுப்பையும், அதிகரித்தது. ஒத்துப் பாடுபட்டால் எவ்வளவு பயன் என்பதற்கு இதுவே ஒரு நற்சாக்ஷி. எறும்பூரக் கல்லும் தேயும்.

மகாத்மாவை சந்திக்க வேண்டுமென்று லார்ட் லின்லித்கோ தெரிவித்திருக்கிறார். அதை மகாத்மாவும் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்கிற செய்தி கேட்க நாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். சுபக்குறிகள்தான்

மின்னலுக்கும், இடிக்கும், காற்றுக்கும் பின் மழைதான் நல்ல காலம். இந்த சந்திப்பால் நமது ஏமாற்றமும், குழப்பமும் கொஞ்சம் தெளிவடைந்து, சமஷ்டி, சமஸ்தானம் இவைகளில் சமரஸத் திட்டமுறையில் முன்னேற்றம் கிடைக்குமென்று நாம் நிச்சயம் நம்புகிறோம். நேரில் பார்த்துப் பேசி விஷயங்களைக் கடைந்து எடுப்பதுபோல் சிறந்த காரியம் வேறொன்றுமில்லை. சந்திப்பை நன்றாய்க் கிடாவின மத்துக்குச் சமானமாக ஒப்பிடலாம். காமக் குரோதங்களும், வேற்றுமைகளும், அடியில் தங்கி, அன்பும், ஒற்றுமையும் இப்படிப்பட்ட நேர் சந்திப்பால் கடைந்த வெண்ணையைப்போல் மேல் பொங்கி வரும்.

மகாத்மாவின் உண்ணாவிரதம், கொண்ட மாரிபோல் எங்கும் எவ்விதத்திலும் பயனை அளித்திருக்கிறது. ராஜகோட் நெருக்கடியை மாத்திரம் தீர்க்கவில்லை; சமஸ்தான வாழ்விற்கே ஓர் புத்துயிர் அளித்திருக்கிறது. மகாத்மா திருபுரிக்கு போகமுடியாவிட்டாலும், திருபுரி காங்கிரஸின் வலக்கை இடக்கை குழப்பத்தையும் கோபதாபங்களையும் கொஞ்சம் கொஞ்சமாய்த் தணித்துக் கொண்டு வருகிறது. மகாத்மாவின் உண்ணாவிரதத்தால் எல்லோருக்கும், இதர தலைவர்களுக்கும் இப்பொழுது கண்ணும் கொஞ்சம் நன்றாய்த் தெரிகிறது. காதும் நன்றாய்க் கேட்கிறது. ஸ்ரீ படேல், ராஷ்டிரபதி போஸ், இருவரும் மறுபடியும் சேரமாட்டார்களோ வென்ற பயம் ஓடிப்போய்க் கொண்டிருக்கிறது. மகாத்மாவின் ஸ்தானத்தை பாபு ராஜேந்திர பிரஸாதும், பண்டித ஜவஹர்லால் நேருவும் ஏற்றுக்கொண்டு, சாந்த சமாதான முறையிலேயே இரண்டுகைகளையும் சேர்த்து, காரியக் கமிட்டியை, சென்ற வருஷம்போல், இந்தவருஷமும் பொருத்தி அமைக்க வேண்டும். பாபு ராஜேந்திர பிரஸாதும், பண்டித ஜவஹர்லால் நேருவும், ஸ்ரீ படேலும், டாக்டர் பட்டாபியும் இல்லாத காரியக் கமிட்டி பூர்ண சுயராஜ்ய வெற்றியடையப் போதுமா? மாகாண சுயாக்ஷி என்ற ஒரு அணா நிக்கல் நாணயத்தை அடைந்த சந்தோஷத்தில் வெள்ளி ரூபாய், முழு ரூபாயின் கௌரவத்தை மறந்து விடலாமா?

திருபுரி காங்கிரஸில் முக்கியமாய் நாம் நடத்தவேண்டிய திட்டங்கள் பின் வருபவை என்று நாம் எல்லோரும் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். அதற்கு வலுவூட்ட வேண்டியது நமது கடமை.

(1) பிரிட்டிஷ் மாகாணங்களைப்போல இந்திய சமஸ்தானங்களுக்கும், கூடிய சீக்ரத்தில் அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தி, சுயாக்ஷி கொண்டுவரவேண்டும்.

(2) பிடரல் சட்டசபைக்குத் தேர்தலில், ஜனங்களே நேராகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். பிரிட்டிஷ் மாகாணத்திலிருந்தும் சரி, சமஸ்தானத்திலிருந்தும் சரி, நேர் முகமற்ற தேர்தல் கூடாது.

(3) மாகாணங்கள் போல் மத்திய அரசாக்ஷியிலும் பூர்ண சுயாக்ஷி ஏற்படவேண்டும். எல்லையிடாமல் எல்லா விஷயங்களையும், சட்ட சபையிலிருந்து எடுக்கப்பட்ட மந்திரி சபையின் கீழ் ஒப்புவித்து விடவேண்டும். நாட்டின் பாதுகாப்பு முக்கியமாய் சட்ட சபையின் கைக்குள் வரவேண்டும்.

மேற்கண்ட விஷயங்களில் பிரிடிஷ் சர்க்காருக்கு ஒருவித கேடு போடுவதில் நம் இருவருக்கும் கொஞ்சங்கூட லாபமில்லை. கெடுப் போடப்பட்ட காரியங்களெல்லாம் வீண் வாதத்திலும், சண்டை சச்சரவுகளிலும்தான் வந்து முடிகிறதே தவிர வெற்றிக்குப் பயன்படுகிறதில்லை. அப்படி வெற்றியடைந்தாலும் பல தீமைகள் அதிலிருந்து பிறக்கின்றன. சக்கரத்திற்கு அலங்காரம் செய்து பளுவை ஏற்றினால் ஓட்டத்திற்குத்தான் கேடு. பயனில்லை; தீங்குதான் விளையும்.

மகாத்மாவின் இந்த உண்ணா விரதத்தால் பலவித நெருக்கடிகளும் தீர்ந்துவிட்டன. அரசியல் அசுத்தங்களும் ஒழிந்தன. ஜீரண சக்தியும் அதிகரித்துவிட்டது. ரத்தமும் பரிசுத்தமாய்விட்டது. சாந்தத்தையும், சமத்வத்தையும் ரத்த ஓட்டம் அடைந்து விட்டது. புத்துயிர் திரும்பி விட்டது. வேற்றுமையில் ஒற்றுமையைப் பார்க்கும் கண் கிடைத்திருக்கிறது. இதைக் கண்டு நாம் களிப்போம். காந்தியின் வெற்றி, குழந்தை தாயோடு சண்டையிட்டு அடையும் வெற்றியைப் போல். அன்பு சுரக்குமே ஒழிய அழியாது.

கே. எஸ். வேங்கடரமணி.

திருக்கும் புத்துயிர்க் குறிகளை, விவரங்களை, விவரமாய் கவனித்துப் பார்ப்போம்.

* * *

ராஜபுட்டானுவில் சுற்றுப்பிரயாணம் செய்துவந்த வைஸ்ராய் தன் பிரயாணத்தைவிட்டுவிட்டு டில்லிக்கு திடீரென்று திரும்பி விட்டார். எல்லா மாகாண மந்திரி சபையும், இந்த ராஜகோட் நெருக்கடியில் ஆதிபத்ய சர்க்கார் உடனே உட்புகுந்து நெருக்கடியை தீர்க்காவிட்டால், தாங்கள் ராஜினுமாச்செய்துவிடுவதாகத் தந்திமூலம் எச்சரிக்கை செய்திருக்கிறுர்கள். "ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகைகூட இரண்டுபத்திதலையங்கம் வீராவேசத்துடன் வீசி எழுதி, ஈட்டிபோல் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து ராஜகோட் தாகூர் சாகிபை பிய்த்து இழுத்துவிட்டது. ஏனென்ருல் நெருக்கடி அதிகரித்தால் வெள்ளைக்கார வியாபார மல்லவோ துலைந்துவிடும்!

* * *

ராஜகோட், புதுக்கோட்டை, உடையார்பாளையம் போலொத்த சிறிய சமஸ்தானம் தான். கொசுவை அடிக்க மகாத்மாவா வரவேண்டும்—வார்தாவிலிருந்து 1000 மைல் ரயிலேறி? இதற்குக் காரணமென்ன? நாணலுக்கு ஆலம் விழுதின் வேர்பலம் எங்கிருந்து கிடைத்திருக்கிறது? அதை நாம் நன்கு அறியவேண்டும்? ஆங்கில அரசியல் சமஸ்தானத் திட்டம்தான் இவர்களைப் போஷித்து காப்பாற்றுகிறது. கொசுவிற்கு சாக்கடை விருந்தளிப்பது போல்.

* * *

இந்த நெருக்கடியில் ராஜப்பிரதிநிதியின் கடமை தெளிவாய் தேசத்தின் முன் நிற்கிறது. காலஹரணம் செய்தால் ஒரு பெரிய கலகத்திற்கு ஹேதுவாக விளையும். மகாத்மாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய கடமை இந்தியர்களுக்கு மாத்திர மல்ல: உலகத்திற்கே உண்டு. இவ்வரிய உயர்தரப் பிறப்பை நாம் மறுபடியும் கண்கொண்டு காண எத்தனை ஆயிரம் ஆண்டுகள் வேண்டுமோ! தாகூர்சாஹிபை தந்தி மூலம் 'காடி'யிலிருந்து விலக்கி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். மகாத்மாவின் உண்ணுவிரதத்தை உடனே மாற்றவேண்டும். இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் ராஜகோட் நெருக்கடி தீர வேண்டும். இல்லாவிட்டால் எல்லாம் நாசமாய்ப் போய்விடும்—காட்டு வெள்ளத்திலகப்பட்ட கரும்புப் பயிர்போல்.

7-3-39 —மணி.

---

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# வார நடப்பு

இந்த வாரம் சரித்திரப் பிரசித்தி பெற்ற வாரம்; சந்தோஷமான வாரம். வார ஆரம்பத்தில் இந்திய மஹா ஜனங்களுக்கு மிகவும் கவலையைக் கொடுத்துவந்த காந்திஜியின் உபவாசம் வாரமுடிவுக்குள் நிறுத்தப்பட்டது மிகவும் சந்தோஷமான செய்தி. ராஜகோட்டில் காந்திஜி அடைந்த வெற்றியால் தேசமெங்கும் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

திருபுரி காங்கிரஸ் விமரிசையாக நடைபெற்று வருகிறது.

திருபுரி காங்கிரஸ் அகில இந்திய பொருட்காட்சியை ஸ்ரீ நேரு திறந்துவைத்து கதரைப் பற்றியும் காந்திஜியின் கொள்கையைப்பற்றியும் ஓர் அழகிய பிரசங்கம் செய்தார். துரதிருஷ்டவசமாக, காந்திஜி திரிபுரிக்கு வர முடியாமல் போய்விட்டது. ஆனால் வைசிராயிடம் ராஜ்கோட் ஒப்பந்த சம்பந்தமாக சில விஷயங்களை விவாதிக்கப்போவதாக செய்தி வருகிறது. இந்த முத்து உங்கள் கைக்கு வருமுன்பாகவே ஒருவேளை காந்திஜி வைஸ்ராயைச் சந்தித்துப் பேசலாம்.

இப்படித் தேசமெங்கும் சந்தோஷத்தில் ஆழ்ந்து ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் வழிதேடிக்கொண்டிருக்கும் சோதனை வேளையிலே அபஸ்வரம்போல வட இந்தியாவில் சில ஹிந்து—முஸ்லீம் கலவரங்கள் நிகழ்வதைக் கேட்கிறோம். நமது சரித்திரத்தில் பல நெருக்கடியான சமயங்களில் இந்த மாதிரி கலவரங்கள் சொல்லிவைத்தாற்போல் நிகழ்வது வழக்கம்.

டெல்லியில் கூடிய ஜமீயத்-உல்-உலிமா இரண்டு முக்கியமான தீர்மானங்களைச் செய்தது. பிடரேஷனை எதிர்த்துக் காங்கிரஸில் நிபந்தனையன்னியில் சேரவேண்டுமென்றும் தீர்மானம் செய்தது.

மேற்கே திரும்பிப் பார்த்தால், அங்கிருந்தும் இந்த வாரத்தில் பல முக்கிய செய்திகள் வருகின்றன. "இனிமேல் பிராங்கோ தான் ராஜா" என்று நாம் முன் வாரத்தில் சொன்னதை இன்னும் ஒரு வாரம் கழித்துச் சொல்ல வேண்டியதுதான். எதிர் பார்த்தபடி ஸ்பெயின் முழுமைக்கு அவ்வளவு சுலபமாக பிராங்கோ அதிபதியாக முடியாது என்பது வாஸ்தவம். ஏனென்றால் கர்னல் கஸாடோ என்பவர் தலைமையில் மாட்ரிட் தலைநகரில் ராணுவ சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. ஜெனரல் மயஜா மந்திரிசபை அமைத்திருக்கிறார். சர்க்கார் கப்பற்படையும் ராணுவமும் குடியரசுக்காகப் போராடுவதாக அறிவித்து விட்டன. இருந்தபோதிலும், கஸாடோ தன் ரேடியோ பேச்சில் சர்க்கார் "கண்ணியமான சுயேச்சையான, சமாதானமான" உடன்படிக்கைக்கு எப்போதும் தயாராக இருப்பதாகக்கூறினர். இந்த சமிக்ஞையைக் கவனித்தால் ஸ்பெயின் சர்க்கார் பிராங்கோ காலில் விழ சமயம் பார்த்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவ்வளவுதான்.

பாலஸ்தீன மகாநாட்டில் பிரிட்டன் சில 'மத்யகால' ஏற்பாடுகளை வெளியிட்டது. பாலஸ்தீனத்தை இரண்டு அல்லது மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்போவதாகவும், யூதர்களும் அராபியர்களும் பிரதிநிதித்துவம் பெற்ற இரண்டு சட்டசபைகளை ஏற்படுத்துவதாகவும், முடிவான அதிகாரங்கள் ஹைகமிஷனர் வசம் இருக்கவேண்டுமென்றும் முக்கியமாகக் கூறப்பட்டது. ஆனல் மப்டி அதற்குப்பதிலாக வேறு சில கோரிக்கைகளைப் பிரேரேபிக்கிறார். அதாவது பாலஸ்தீனத்தில் அராபியருக்கு சுதந்திரம் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு இங்கிலாந்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். யூதர் குடியேற்றம் வரையறுக்கப்படவேண்டும். அதிகமாய்ப் போனல் பாலஸ்தீனத்தில் கால்வாசிக்குமேல் யூதர்களுக்குக் கொடுக்கக்கூடாது—இவைதான் மப்டியின் முக்கியமான கோரிக்கைகள்.

தென் ஆப்பிரிக்காவில்மட்டும் இந்த நிறவேற்றுமை தொலையாதுபோலிருக்கிறது. கென்யாவில் சர்க்கார் கையாளும் 'ஒதுக்கிவைக்கும் முறையைக்' கண்டிக்கவும் சமாதானமாகப் போராடவும் நமது இந்திய சகோதரர்கள் ஓர் சங்கத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். அவர்களது பிரதிநிதி ஒருவர் இந்தியாவுக்கு வந்து அவர்களது கட்சியை காங்கிரஸுக்கும் இந்திய சர்க்காருக்கும் தெரிவிப்பார் என்று அறிகிறோம்.

# பருவப் பிறப்பு

(ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்)

மார்ச்சு மாதம் 5-ம் தேதியன்று சாந்தி நிகேதனத்தில் வசந்தோத்ஸவம் கொண்டாடினார்கள். அதாவது பால்குன பௌர்ணமியன்று இளவேனிற்கால விழாவைக் கொண்டாடினார்கள். சொல்லப் போனால் மாக பூர்ணிமையன்றே வசந்தத்திற்கு துவஜாரோஹணம் ஆகிவிட்டது.

*  *  *

கவி ரவீந்திரர் அந்த சமயத்தில் வசந்த கால வரவின் அர்த்தத்தை விளக்கிப் பேசினார். "இளவேனிலின் இரகசியமாகிய உயிர் உணர்ச்சி, இன்பம்—இவற்றை நாம் இன்று வரவேற்கிறோம். பனியின் படுந் துயரத்திலிருந்து வெடித்துத்தான் வெளிக்கிளம்பி வரும் இந்த ஆனந்தம் என்று நாம் அறிகிறோம்..." துயரம் தீர்ந்து போய் விட்டதென்பதல்ல. திரும்பத் திரும்ப பனிகாலம் வரும்; ஆனால் திரும்பத் திரும்ப வசந்த காலமும் அதன் இறுதியில் வந்து கொண்டே இருக்கும். "பனிகாலம் வந்தால் வசந்தம் வெகு தூரத்திலில்லை" என்றார் கவி ஷெல்லி.

*  *  *

துயரம் எவ்வளவு நிச்சயமானதோ அவ்வளவு நிச்சயமானது இன்பமும். பனியிலிருந்து விடுபட்டு இளவேனிலில் பருவம்பெறும் இயற்கையே அதற்கு அத்தாட்சி.

*  *  *

இத்தனை நாள் இலையின்றி உலர்ந்தது போன்று கிடந்த சம்பங்கிக் கொடி திடீரென்று இரண்டு வாரத்தில் இலைவிட்டுக் கொடியோடி விட்டது. அதன் வேரில் எங்கோ அடைபட்டுக் கிடந்த ஜீவரஸம் பீரிட்டுக் கொண்டு கிளம்பி கொடியிலும் காம்பிலும் பாய்கிறது; பச்சை மொட்டுகள் பளிச்சென்று தோன்றி விட்டன. மாமரங்கள் வெட்கிய தளிர் மாதர்களை கூட்டங்கூட்டமாகக் கொண்டு வந்து நிறுத்தி விட்டன. கம்மிக் கிடந்த குரலை எப்படியோ சரிப்படுத்திக் கொண்டு பறவைகள் தலைதெரியாமல் கத்துகின்றன.

நேற்று காலை சேப்பாக்கம் அரண்மனைப் பக்கமாக உலாவச் சென்றேன். சென்னையில் இவ்வளவு பட்சிகள் இருக்குமென்று நான் எண்ணவில்லை. செம்போத்து முதல் மரங்கொத்திவரை எல்லாம் பலவிதமாக சுருதிலயங்கள் அமைத்து அமர்க்களமாக கச்சேரி நடத்திக் கொண்டிருந்தன. சென்னைக்கு வந்து ஆறு மாதத்திற்குப் பிறகு முதல் முதலாக கிராமாந்திரத்தின் ஞாபகம் வந்தது.

*  *  *


வால்ட் டிஸ்னி என்ற மேதாவியின் வர்ணப்பட மொன்றுகூட நினைவிற்குவந்தது. பனி காலமும், பனிகாலம் போய் பிறகு வந்த இளவேனிற் காலமும் அந்தப் படத்தில் இயற்கைக் காட்சிகளின்மூலம் வெகு மனோரம்மியமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

*  *  *

பனி காலத்தின் கர்ப்பத்திலிருந்துதான் வசந்த காலம் பிறக்கிறது. இரவிலிருந்து பகல் பிறப்பதுபோல பனி காலம் பழுத்து வசந்தமாகிறது—காய் பழுத்து கனியாவதுபோல பனியின் வெண்மை உடைபட்டு வசந்தத்தின் வகை வகையான வர்ணங்கள் தோன்றுகின்றன—முப்பட்டைக் கண்ணாடியில் விழும் வெள்ளை ஒளி ஏழு நிறங்களாக உடைவது போல. இந்த ஆழ்ந்த கருத்தை வைத்துத்தான் நமது காவியங்கள் பார்வதியைஹிமவானின் மகள் என்று வர்ணிக்கின்றன. ஹிமவான் சேதனமற்ற பனிசமூகம்; பார்வதி அவனுடைய மௌனத்திலிருந்து பிறந்த ஒலி.

*  *  *

திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் நான் பார்த்திருக்கிறேன். ரதி புலம்பலும், எரிந்த கட்சி, எரியாத கட்சிப் பாட்டுகளும் மனோகரமாக இருக்கும். நமது நாட்டு மக்களிடையே இன்னும் கவிதை புணர்ச்சி போகவில்லை. அழகு வணக்கம் அழியவில்லை என்று மனதிற்கு ஆறுதல் ஏற்படுகிறது.



# “பூவுடன் நாரும்”

(ஸ்ரீ ஸு. சேதுராமன்)

மத்தியானம். வெயில் மிகவும் கோரமாக இருந்தது. பஸ் வேகமாகப் போய்க் கொண்டிருந்தபடியால் அனல் காற்று வேறு வீசிக்கொண்டிருந்தது. புழுக்கம் தாங்கமுடியவில்லை. கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தரக்கூடிய தோற்றங்களே இல்லை. கோடையால் கருகிப்போய், வெளிச் சென்ற நிசப்தத்தில் அமைதியோடு நிற்கும் மரங்கள் தான் கண்களுக்கெட்டிய தூரம் வரையில் தென்பட்டன. வெறும் மணல் ரஸ்தாவானதால் அந்தத் தாங்கொணாத வெயிலில் கண்கள் கூசின.

பட்டப்பகலில் டாக்டர் ஐயரவர்களும், அவர்களோடு உடன்செல்லும் பாக்கியம் பெற்ற நானும் உடையார்பாளையம் வந்து சேர்ந்தோம். அப்போது இருந்த திவ்வியமான இயற்கைத் தன்மைகளைத் தான் மேலே எழுதியிருக்கிறேன்.

ஆனால் ஸ்ரீ ஐயரவர்களுக்கு அந்த அத்வானப் பிரதேசங்களைக் காணும்போது உளம் பொங்கியது. சந்தோஷம் இவ்வளவுதான் என்றில்லை. அங்கு, தாம் சிறுவயதில் சுற்றி ஓடியாடியது எல்லாவற்றையும் மறுபடி நினைவுக்குக் கொண்டு வந்து மனம் உருகினார்கள். “பாலியத்தில் நான் வளர்ந்த பூமி இது—பார்க்கவேண்டுமென்று வெகு நாட்களாகவே ஆசைப்பட்டுக்கொண்டிருந்தேன்” என்று சொன்னார்கள்.

திடீரென்று யாதொரு முன்னறிவிப்பும் இல்லாமல் போகும்படி நேர்ந்துவிட்டதால், ஐயரவர்களை அழைத்துப்போகத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. ஆனாலும் என்ன? அரியலூர் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கின சற்றுப் பொழுதுக்குள் எப்படியோ, பலர் மொய்த்துக் கொண்டுவிட்டனர் — ‘ஏரோப்ளேனை’ப் பார்ப்பதுபோல. அவர்களில் முக்கால் வாசிப்பேர் மாணவர்கள் என்று சொல்லுவது மிகை.

‘இந்தத் தாத்தா பெரிய மாயாவி. நம்மையெல்லாம் எப்படி வசியப்படுத்தி விடுகிறார்! பேசும்போதே ஹாஸ்யம். உடனுக்குடன் நன்மொழிகள்; எல்லாவற்றையும் குழைத்துக் கிண்டல் செய்யும் தோரணையில் வெளியிடுகிறார்...’ என்ற மனோபாவம் அவர்களுடைய முகங்களில் விகஸித்தது.

“நீங்க தானே வறுமைப் புலி எழுதினது....”

“பரம்பரைக் குணம் ரொம்ப நன்றாக இருக்கிறதே! இந்த வருஷ டெக்ஸ்டிலே வந்திருக்கிறது...”

“கலைமகள் யாரு, நீங்களா போடுகிறேள்?...எப்போதும் அதிலே நீங்கள் எழுதுகிறீர்களே!...”

“போனவருஷம் எங்கள் காலேஜுக்கு வந்து லெக்சர் பண்ணேளே!...”

ஏக காலத்தில் இம்மாதிரி கேள்வித் 'தளங்'கள் வந்து விழுந்தன. யாருக் கென்று பதில் சொல்ல முடியும்? அவ் வளவு மாணவர்களையும், அன்பர்களையும் இந்தத் தொண்டு கிழவர் ஒண்டிக்காரராக எப்படியோ சமாளித்துவிட்டாரே!

மற்றவர்களைவிட, மாணவர்களுக்குத் தான் ஸ்ரீ ஐயரவர்களிடம் அதிகமான மதிப்பு, பயம், மரியாதை எல்லாம் இருக் கின்றன என்றுகூடச் சொல்லலாம். அவர் களைக் கண்டவுடனேயே தான் ஸ்வரசுத்த மான ஸங்கீதத்தைக் கேட்டு மயங்கும் 'நல்ல பாம்பா'கி விடுகிறார்களே மாண வர்கள்! நிற்க.

உடையார்பாளையத்துக்குப் பஸ்ஸில் தான் போகவேண்டியிருந்தது. வழிநெடு கப் பல இடங்களைச் சுட்டிக்காட்டித் தம் இளமையில் ஏற்பட்ட அநுபவங்களைச் சொல்லிக்கொண்டே வந்தார்கள். கூட வந்த பிரயாணி ஒருவர் 'பாவம், கிழவர்— தள்ளாதவர்!' என்று தாம் பரிதாபப்படு வதை அடிக்கடி வெளியிட்டுக்கொண்டிருந் தார். நான் மனதுக்குள் "ஓஹோ! தள்ளாதவரா! இந்தப் பஸ்ஸைக்கூடத் தள்ளிவிடுவாரே நினைத்தால்!..." என்று எண்ணிக்கொண்டேன். இந்தச் சந்தர்ப் பத்தில் ஒன்று ஞாபகம் வருகிறது.

ஒருநாள் ஸ்ரீ ஐயரவர்கள் தம்முடைய 'ஆராய்ச்சிக் கிடங்கில்' பெரிய நாற்காலி ஒன்றை வேறிடத்தில் போடுவதற்காகத் தூக்கிக் கொண்டிருந்தார்கள். நான் வேக மாக அருகில் ஓடிப்போய், அவர்கள் கையிலிருந்த நாற்காலியைப் பிடித்துக் கொண்டேன்.

"போ, உன் காரியத்தைப் பாரு. என்னை என்ன அவ்வளவு கேவலமாகவா நினைத்து விட்டாய்!......உனக்குத் தான் பலம் இருக்கிறதோ?...ஒரு கை பார்ப் போமா சண்டைபோட்டு, யாருக்கு பலம் அதிகமென்று" என்று பிரசாந்த மந்த ஹாஸத்துடன் கண்களைச் சிமிட்டிக் கொண்டு கேட்டார்கள். அதே மூச்சில் "போனால் போகிறது!...இந்தத் தடவை வேண்டாம்" என்று சொல்லிவிட்டு நாற் காலியை என்னிடம் விட்டுவிட்டார்கள். அவர்கள் விரும்பிய இடத்துக்கு அது மாற்றப்பட்டது.

உடையார்பாளையம் போகும் வழியில் அரியலூரில் தம் பாலியத்தில் முதன் முதலாகத் தமிழ்ப் பாடம் கேட்ட, குருவி னுடைய வீட்டையாவது பார்த்து விட் டுத்தான் செல்லவேண்டுமென்று சொன் னார்கள். அங்கிருந்த சடகோபாசாரியார் என்பாரிடம் இளமையில் கொஞ்சகாலம், பிரபந்தங்கள் முதலியன பாடம் கேட் டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவருடைய கிருஹத்தைக் கண்ணாலாவது பார்க்க வேண்டுமென்று விரும்பினார்கள்.

கிளிக்கூடுபோன்று மிகவும் தாழ்ந்த வீடு அது. நிமிர்ந்து நடக்க முடியாது. அவ்வீட்டுக்குப் போய் "சடகோபாசாரி யார் ஸம்ஸாரம் இருக்கிறார்களா?" என்று கேட்டார்கள்.

"இல்லை" என்று பதில் வந்தது.

"அப்படியானால் வீட்டுக்குள்ளேயாவது நுழைந்து விட்டு வரலாம்!" என்று சொல் லிக்கொண்டே உள்ளே சென்றார்கள். "குனிந்து போகணும்" என்று எச்சரித் தார் வீட்டுக்காரர்.

"குருநாதனுடைய வீட்டில் தலைவணங் கியே செல்கிறேன்! நிமிர்ந்து நடக்கமாட் டேனே!" என்று சொல்லும்போதே ஓர் வித ஏக்கம் துவனித்தது அவர்களுடைய குரலில்.

"இந்த இடத்தில்தான் சடகோபாசாரி யார் உட்கார்ந்திருப்பார்....அங்கே தான் நான் உட்கார்ந்து படிப்பது வழக்கம்...... ஆரம்பத்தில் சிறிது காலந்தான் இவர்க ளிடம் படித்தேன் என்றாலும், இவர்க ளுடைய அநுக்கிரகம் தான் எல்லாம்!..." என்று சொன்னார்கள்.

ஸர்டிபிகேட்டில் கையெழுத்துப் போட் டவுடனேயே குரு-சிஷ்ய பந்தனம் அற்றுவிடுகிற இந்த நாள் படிப்புக்கும், ஐயரவர்களுடைய அந்த நாள் படிப்புக் கும் இதுதான் வித்தியாசம்!

* * *

உடையார்பாளையத்தில் ஆகவேண்டிய காரியங்களைப் பார்த்துக்கொண்டு திரும்ப வேண்டிய தினம் வந்தது. அந்த ஐந்தாறு நாட்களும் ஊரே கலகலவென்று இருப் பதுபோலத் தோன்றியது. அடிக்கடி பலர் ஸ்ரீ ஐயரவர்களைக் கண்ணாலாவது பார்த் துவிட்டுப் போவோமே என்று வந்து

போய்க் கொண்டிருந்தனர். எல்லோருக்கும் பரம குதூகலம்!

ஸமஸ்தானத்துக் கார் வாயிலில் வந்து நின்றது. ஊரில் எல்லோரும் கூட்டமாக அங்கங்கே கூடி நின்றனர். இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பிப் போகிறாரே என்று அவர்கள் வருத்தப்பட்டுத்தான் இருப்பார்கள்.

"பட்டணத்தில் வேலைகள் எல்லாம் தவக்கப்பட்டு விடும்....இன்னொரு தடவை அதிக நாள் தங்கும்படியாக வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறிக் கொண்டார்கள்.

குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேர இரண்டு மணி நேரமாவது ஆகும். ஆகையால் ருத்ராக்ஷ மாலையை எடுத்து ஜபம் செய்து கொண்டே வந்தார்கள்.

கார் போய்க்கொண்டே யிருந்தது. அருகில் உட்கார்ந்திருந்த என்னிடம் "பார்த்தாயா ஈசுவரன் லீலையை!—இதே பிரதேசங்களில் இளமையில் எவ்வளவு சுற்றித் திரிந்திருக்கிறேன் தெரியுமா? கல்லிலும் முள்ளிலும் எத்தனை தடவைகள் அலைந்திருக்கிறேன்!... இந்தமாதிரி ஒரு காலம் வரும் என்று அப்போது நான் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.... எல்லாம் ஈசன் திருவருள்......" என்று உள்ளமுருகிச் சொன்னார்கள்.

"உண்மைக்கு ஒருநாளும் குறைவு வாராது" என்ற பெரியோர்களுடைய வாக்கை அநுவாதம் செய்வதுபோலில்லையா இது?

* * *

ஸ்ரீ. ஐயரவர்கள் பல்லாண்டு வாழ்ந்து "மறுபடி வந்து அதிக நாட்கள் தங்குகிறேன்" என்று ஆறுதல்கள் சொல்லியிருக்கும் பல இடங்களுக்கும் சென்று எல்லோரையும் திருப்தி செய்யவேண்டும். அதற்கு வேண்டிய சரீர பலத்தையும் ஆயுள் பலத்தையும் அளிக்கும்படி எல்லாம் வல்ல ஈசுவரனைப் பிரார்த்திப்போமாக.

—


## நமது புத்தகசாலை

| | ரூ. | அ. |
|---|---|---|
| கேமால் அத்தாதுர்க் (ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா) | 1 | 8 |
| சந்தனக்காவடி (ஸ்ரீ தி. ஜ. ர.) | 0 | 8 |
| மாயா விநோதினி (ஸ்ரீமதி தஞ்சம் மொழி பெயர்த்தது) | 1 | 8 |
| ஹரிஜன சேவை (ஸ்ரீ ஏ. கே. சந்திரசேகரன்) | 0 | 2 |
| மாதங்கினி (ஸ்ரீ டி. என். குமாரஸ்வாமி மொழி பெயர்ப்பு) | 1 | 0 |
| ஹேமலதா | 1 | 4 |
| இந்திரா (ஸ்ரீ எஸ். குருசாமி மொழி பெயர்ப்பு) | 0 | 12 |
| யுஜுர் வேதம் (ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன்) | 3 | 0 |
| முக்கிய அரசியல் திட்டங்கள் (ஸ்ரீ ந. ரா. சுப்பையர்) | 1 | 8 |
| காவ்யங்கள் (மகாகவி பாரதியார்) | 2 | 8 |
| குமுதினி (ஸ்ரீமதி ரங்கநாயகி மொழி பெயர்த்தது) | 1 | 8 |
| ஜெக்கோஸ்லோவேகியா (ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா) | 1 | 0 |
| மாகாண சுயாட்சி (ஸ்ரீ ஏ. என். சிவராமன்) | 0 | 8 |
| ஆண்டு நிறைவு (வ. ரா.) | 0 | 2 |
| ஹிட்லர் (ஸ்ரீ வே. சாமிநாத சர்மா) | 2 | 4 |
| கண்ணன் என் கவி (ஸ்ரீமான்கள் கு. ப. ராஜகோபாலன் & பெ. கோ. சுந்தரராஜன்) | 0 | 6 |

**சுவேதாரண்ய ஆச்ரமம்,**

7, வடக்கு மாடவீதி, மைலாப்பூர்,

—: சென்னை. :—

# திருட்டு பயம்

("கிருஷ்ண குமாரி")

எங்கள் ஊர் மிகவும் பழமையான ஓர் குக்கிராமம். அதில் பாழடைந்த வீடுகளைத் தவிர, எண்ணிப் பார்த்தால் மொத்தம் பதினைந்து வீடுகளுக்கு மேலிராது. ஆகவே ஊரில் எது நடந்தாலும்—அது எவ்வளவு அற்ப விஷயமாயிருந்தாலும் சரி—ஒரு நொடியில் முழுவதும் பரவி விடுமென்பதிலென்ன ஆச்சரியம்? அதிலும் எங்கேயாவது ஒரு திருடனென்று காதில் விழுந்து விட்டால் போதும்; அப்புறம் ஊர் என்ன பாடு படுமென்று நினைக்கிறீர்கள்! ஜேஜே என்று ஜன நடமாட்டமும், விடிய விடிய விளக்குகளும் போலீஸ் பந்தோபஸ்துகளுமுள்ள பட்டண வாசங்களில் இந்த பயம் ஒரு பெரியதாய்த் தோன்றாது. ஆனால் அஸ்தமிப்பதற்குள் சந்தடியற்று விடும் குக்கிராமங்களில் அவ்வாறிருக்குமா?

சமீபத்தில் ஒரு வீட்டில் நிஜமாகவே திருடன் வந்தானென்று கேட்டதும் சில நாள் வரையில் ஊரில் யாருக்காவது நல்ல தூக்க மிருக்க வேண்டுமே; கிடையாது. எங்கள் வீட்டில் எல்லோரும், அடுத்தஊரில் ஒரு பந்து வீட்டுக்கலியாணத்திற்குப் போயிருந்தார்கள். நானும் அத்தையும் மட்டும் தான் அகத்திலிருந்தோம். எங்களுக்கிருந்த பயத்தில் தூங்குவதற்கு முன்பு வீடு முழுவதும் ஒரு மூலை முடுக்கு பாக்கி யில்லாமல் பார்த்து விட்டுத்தான் படுத்துக்கொள்வது வழக்கம். கையில் தீபத்துடன் அத்தை தைரியமாய் முன்னால் போவாளே யொழிய ஏதாவது ஓர் எலி ஓடின சத்தம் கேட்டால் கூட விழுந்தடித்து கூடத்துக்கு ஓடிவந்து விடுவாள். அவ்வளவு பயம் அவளுக்கு. நித்தியம் பொழுது விடிந்தால் இந்தப் பேச்சுதான். "இராத்திரி எங்காத்தில் கல் விழுந்தது" என்று ஒரு வீட்டில் சமாசாரம் சொல்லுவார்கள். "கொல்லைக் கதவு ஓசைப்பட்டது போலிருந்தது. இராமுழுவதும் ஒருவரும் தூங்கவில்லை" என்று மற்றொரு வீட்டில் செய்தி.

இந்தச் சமாசாரங்களை யெல்லாம் சரியாக விசாரித்துச் சொல்வது யாரென்றால் கோடி யாத்துச் சானுப் பாட்டிதான். சானுப் பாட்டிக்கு, தான் ரொம்ப தைரியசாலி யென்று நினைவு. "அந்தக் கட்டையிலே போறவன் எங்காத்துக்கு மட்டும் வரட்டும். சொல்றேன்" என்று வெகு வீறுப்பாய் பேசிக் கொண்டாள். ஆனால் அது வெறும் ஜம்பமென்று எங்களுக்குத் தெரியும். நாங்கள் சந்தேகித்ததற்குச் சரியாய் பட்டாமணியகாரர் வீட்டிலிருந்து துணைக்கு ஒரு ஆளை வந்து படுத்துக் கொள்ளச் சொல்லி யிருக்கிறாளென்று விசாரித்ததில் தெரிய வந்தது. என் அத்தை சுத்த பயங்காளி. பேச்சில்கூட தைரியமாய்க் காட்டிக் கொள்ள அவளுக்கு வராது. வரவர, விழித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாய் ஒரு பக்கம் அஸ்தமிப்பதற்குள்ளேயே வீட்டுச் சோதனையை முடித்துக் கொண்டு படுத்துக் கொள்ளத் தொடங்கி விட்டோம். சீக்கிரம் படுத்துக் கொண்டால் சீக்கிரமே பொழுது விடிந்து விடுமென்று அத்தைக்கு ஏதோ குருட்டு நினைவு.

ஒருநாள் சாயங்காலம்—அநேகமாய் இருட்டி விட்டது—வாசற்கதவு ஏதோ சத்தப்பட்டது போலிருந்தது. கதவைத் திறப்பதற்காக எழுந்த என்னை அத்தை பேசாமலிருக்கும்படி ஜாடை செய்து விட்டு, தான் மட்டும் தலைக்கு வைத்துக் கொண்டிருந்த கட்டை மணையைக் கையிலெடுத்துக் கொண்டு கதவண்டை போனாள். ஏதாவது சந்தேகம் தோன்றினால் கட்டைமணையை மண்டையில் போட்டு விடுவதென்ற உத்தேசம் போலும்! ஆனால் "ஒருவருமில்லை, நான்தான்" என்று சானுப் பாட்டியின் குரல் கேட்கவே கதவைத் திறந்தோம். சானுப்பாட்டியும் வாசற் கூட்டி பொன்னியும் உள்ளே நுழைந்தார்கள். எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. சானுப் பாட்டியைப் பார்த்தால் ரொம்ப கலவரமும் திகிலு மடைந்திருப்பது போல் தோன்றிற்று.

"இந்தா, இதைப் பத்திரமா உள்ளே வை" என்று கையிலிருந்த ஒரு சிறு "அஞ்சல்"ப் பெட்டியை என்னிடம் கொடுத்தாள். அவள் வாழ்ந்து கொண்டி

ருந்த நாளில் அணிந்து கொண்டிருந்த இரண்டொரு நகைகளை நாட்டுப் பெண்ணுக்குக் கொடுக்க மனதாகாமல் அந்த "அஞ்சல"ப் பெட்டியில் போட்டு வைத்திருந்தாள்.

"பட்டாமணியகாரராத்து ஆள் இன்னிக்கு வரவில்லே. பொன்னியும் இருக்க மாட்டேன்னுட்டா. நான் ஒரு கிழம் மட்டும் தான் இருக்கேன்னு தெரிஞ்சிகிண்டு எவனாவது ராத்திரி வந்துட்டா என்ன செய்யறதுன்னு பயமாய் போயிடுத்து. இரண்டு பக்கத்திலும் பாழடஞ்ச வீடு. கத்தினக்கூட ஒத்தருக்கும் கேக்காது" என்று சானுப்பாட்டி சொல்ல, "ஏது நீங்க அப்படி சாதாரணமா பயப்பட மாட்டீளே!" என்று உபசாரமாய்ச் சொன்னாள் என் அத்தை.

"மத்தியானம் திண்ணையிலே உட்காந்திருந்தேன். கன்னங்கருக்க இரண்டு பேர் வீட்டைத் திரும்பித் திரும்பிப் பார்த்து ஏதோ பேசிக்கிண்டு போனாப்பிலே யிருந்தது. சாயந்திரம் பிச்சைக்காரியாட்டமா ஒத்தி 'பட்டினி; சாதத்தைக் கொண்டா' என்று கேட்டுக்கிண்டு உள்ளேயே வந்துட்டா. வீட்டிலே ஒத்தரும் புருஷாளில்லேன்னு தெரிய வேண்டான்னுட்டுத்தான் சீனு அங்கோஸ்திரத்தைக்கூட கூடத்திலே மாட்டிவைச்சிருக்கேன்" என்றாள் சானுப்பாட்டி.

எங்களைப்போல் அவளும் பயந்தொழுகியதைப் பார்க்க எங்களுக்கு மிகவும் சந்தோஷமாகவே யிருந்த படியால் அவள் முதலில் தனக்குப் பயமில்லையென்று ஜம்பமடித்துக் கொண்டதைப்பற்றி ஒன்றும் கேட்காமலிருந்து விட்டோம். அன்றிரவு சானுப்பாட்டியும் என் அத்தையும் வெகு நாழிகை வரையில் தாங்கள் குழந்தையிலிருந்து கேட்டிருந்த திருட்டுக் கதைகளை ஒவ்வொன்றாய் ஞாபகப்படுத்திக்கொண்டு சொல்லத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் சொல்லச் சொல்ல எனக்கு ஒரே நடுக்கமா யிருந்தது. தாம் பயந்தது நியாயம்தானென்று காட்டுவதற்காக சானுப்பாட்டி வேண்டுமென்றே ரொம்ப பயங்கரமாய் இட்டுக் கட்டிச் சொன்னாளென்று நினைக்கிறேன். பொழுது விடிந்தால் என்ன சமாசாரம் வருமோவென்று நாங்கள் கவலைப் பட்டோம். சானுப்பாட்டி தன் பெட்டியை எடுத்துக் கொண்டு இங்கு வந்து விட்டதைத் தெரிந்து கொண்டு திருடர்கள் இங்கேயே வந்து விட்டாலென்ன செய்கிறதென்ற திகிலே எனக்குப் பெரிதாயிருந்தது.

பொழுது விடிந்தது நல்ல வேளையாய் ஒன்றும் நடக்கவில்லை. சானுப்பாட்டிக்குக் கல்பனை ஜாஸ்தி. தான் திண்ணையிலுட்கார்ந்திருக்கும் பொழுது பார்த்த "ஆசாமிகளை"ன்று பெரியதாய் வர்ணிக்கத் தொடங்கி விட்டாள். ஆனால் ஒவ்வொரு சமயமும் அவர்கள் ரூபம் மேன்மேலும் பயங்கரமாகிக்கொண்டே வந்தது. ஒருவன் கட்டைகுட்டையாய்க் கன்னங்கரேலென்றும் மற்றொருவன் கரிய மீசையும் கோரைப் பற்களு முடையவனாயுமிருந்தானென்று முதலில் சொன்னாள். மறுதடவை சொல்லும்பொழுது கட்டைகுட்டையாயிருந்தவன் ஏழடி உயரமுள்ளவனாய் விட்டான். கரிய மீசையும் செம்பட்டை மீசையாய் விட்டது. பிச்சைக்காரி போலிருந்தவளோ, புருஷன்தான் அப்படிப் பெண்பிள்ளை வேஷம் தரித்திருக்க வேண்டுமென்று ஒரே அடியாய்ச் சாதித்தாள். ஏனெனில் அவள் முகத்தில் மீசை தாடியெல்லாம் நன்றாய்த் தெரிந்ததாம். படி ஏறுவதற்குள் அவளை வெரட்டியடித்துக் கதவைத் தாளிட்டிருக்கும் பொழுது இதெல்லாம் எப்படிக் கவனிக்க முடிந்ததோ தெரியவில்லை.

மற்றொரு நாள் செட்டியார் வீட்டில் அவர் வெளியிற் போய்விட்டு இரவு 9 மணிக்குத் திரும்பி வரும்பொழுது திண்ணைக்கடியில் பதுங்கி யிருந்த ஒருவன் திடீரென்று அவர்மேல் பாய்ந்து இடுப்பிலிருந்து அரைஞாள், பணம் எல்லாவற்றையும் கழற்றிக்கொண்டு ஓடிவிட்டானென்று சொல்லிக் கொண்டார்கள். அதைச் சரியாய் விசாரித்து வாராமலிருக்கச் சானுப் பாட்டியால் முடியுமா? ஏதோ காரியமாய்ப் போவதுபோல் அங்கு போய் அவரையே நேரில் கேட்டுத் தெரிந்து கொண்டு வந்தாள்.

"திருட்டுப் போகவுமில்லே ஒண்ணுமில்லே; அதெல்லாம் வெறும் பிரளின்னு செட்டியார் ஒரே அடியா முழுப்பூசனிக்காயைச் சோற்றிலே மறைக்கப் பாக்கிறார்.

(671-ம் பக்கம் பார்க்க)

# அரசியல் வாதிகள் !

"வஸந்தன்"

"ஸார் ! உங்கள் பிள்ளை என்ன பண்ணு கிறுன் ?"

"அவனு ? அதை ஏன் கேட்கிறீர்கள். அவன் பண்ணுகிற அட்டஹாஸம் சகிக்க முடியவில்லை. காலேஜுக்குப் போகச் சொன்னுல் திருட்டுத்தனமாக 'அட்டென்டன்ஸ்' கொடுத்துவிட்டு வந்துவிடுகிறுன். வீட்டில் பண்ணுகிற 'லூட்டி'யோ சகிக்கமுடியவில்லை. நான் என்ன ஸார் பண்ண ?"

"அப்பொ அரசியலிலே சேர்த்து விடுங்கோளேன்." இப்படி இரு நண்பர்கள்பேசிக்கொள்கிருர்கள்.

* * *

"பெண் தங்கமான பெண் என்று அவரே சொன்னுர். பிள்ளைக்கும் பிடித்திருக்கிறது..."

"சரி ! முதலிலே கேட்டுக்கொண்டுதான் கல்யாணம் செய்யவேணும். நல்லது. பையனுக்கு என்ன சொத்து இருக்கும் ?"

"நாலுவேலி நிலம்; 10,000 ரூ. கையில் ரொக்கமாக இருக்கிறது.'.

"சந்தோஷம். பையனும் வாட்டசாட்டமா நன்ருக இருக்கான். வேலை என்னவோ ?"

"அவனுக்கு எதுக்காக வேலை? அவன் ராஜாங்கத்திலே சம்பந்தப்பட்டவன். ரொம்ப சூட்டிகையான அரசியல்வாதி."

"ஆ ! அப்படியா ? சரி; நான் போய் வருகிறேன்" என்று மாப்பிள்ளைக்குப் பெண் கொடுக்கவந்தவர் கம்பி நீட்டுகிருர்.

இந்த சம்பவங்களெல்லாம் இன்னும் ஐந்து வருஷங்களில் நடக்கப்போவதாக நண்பர் சொல்லுகிருர். ஏதோ அது அவருக்குத் தோன்றியது.

* * *

டாக்டர் ஜான்ஸன் முன்னெரு தடவை சொன்னுர்: "போக்கற்றவனுக்கு கடைசி இடம் ராஜீயம்". அவர்மட்டும் இப்போது புனர்ஜன்மம் பெற்று இந்த உலகத்திற்கு வந்தால் அவர் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளும்படியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இப்போது ராஜீய உலகில் அடிபடும் நாஸிஸம், பேஸிஸம், இவைகளையெல்லாம் பற்றிக் கேட்டாராஞல் அவர் நிச்சயம் திக்குமுக்காடிப் போய்விடுவார். "ஐயோ ! தயவுசெய்து என்னை விட்டு விடுங்கள் ; நான் போய் விடுகிறேன். நான் ராஜீயத்தைப் பற்றிச் சொன்னது தப்புத்தான்" என்று மன்ருடத் தொடங்கி விடுவார். ஆமாம்; அரசியல் உலகம் இப்போது அவ்வளவு பயங்கரமாக இருக்கிறது.

* * *

மூளையைக் குழப்பும் பல கொள்கைகளும் ஆளைத் தூக்கியடிக்கும் வார்த்தைகளும் நிறைந்த நமது ராஜீயத்தைப் பார்த்து யார்தான் கொலை நடுக்கம் கொள்ளாமல் இருக்கமுடியும் ? கசாப்புக்கடைக்காரனுக்கு ஆட்டை வெட்டுவது பிரமாதமில்லை. வெளியே இருப்பவர்களுக்குத்தான் அந்தக் காட்சி சகிக்கமுடியாததாய் இருக்கிறது. புதுப்புது ராஜீயக்கொள்கைகளையும் வார்த்தைகளையும் கேட்டு நாம் மிரண்டு போகிருேம். ஆனுல் ராஜீய வாதிகளுக்கு இந்த வார்த்தைகள் ஒன்றும் பிரமாதமில்லை. இதை அடிக்கடி சொல்வதில் அவர்களுக்குச் சந்தோஷம்கூட.

* * *

சமீப காலத்தில் "வாலிபர் சங்கம்" என்ற படத்தைப் பார்க்கநேர்ந்தது.அதில் ஓர் கட்டத்தில் 'வாலிபர் சங்கம் உனக்கு வேணுமா" என்று கேட்டாள் அக்காள். "அது என்னபக்ஷணம்?" என்றுகேட்டது குழந்தை. அந்த மாதிரி ஓர் குடியானவனிடம் போய் "அப்பா ! உனக்கு ஸோஷலிஸம் வேணுமா ?" என்ருல் "அது என்ன பலஹாரம் ஐயா !" என்று கேட்பான். "அடே ! உனக்கு கம்யூனிஸம் வேணுமா" என்று கேட்டுப்பாருங்கள். மிரள மிரள விழிக்கத்தொடங்குவான் "சரி! அப்போ உனக்கு'டோடலிடேரியானிஸம்' தான் வேண்டும் போலிருக்கிறது." என்று சொல்வதற்குள் அந்தர்த்தியானமாய் மறைந்து விடுவதைப் பார்ப்பீர்கள். கொள்கைகள் பிடிக்கட்டும் பிடிக்காமல் போகட்டும், பெயர்களாவது நைஸாக இருக்கக்கூடாதா ?

தெரியாவிட்டால் சர்க்கார்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டால் போகிறது. "சமாதான ஆக்ட்" என்று மிகவும் சாதாரணமாக இருக்கும், சட்டத்தின் பெயர். அந்தச் சட்டத்தின் கீழ் நாலு பேர் கூடுவதைத் தடுக்கலாம், ஒரு கூட்டத்தில் பேசுபவர்களைத் தூக்குக் கூட போட்டு விடலாம் சந்தடியில்லாமல். இந்த தூக்குச் சட்டத்திற்கு "சமாதானச் சட்டம்' என்று பெயர்! இன்னும், கத்தியால் குத்தவில்லை, திருடவில்லை, ஒருவருக்கும் ஹிம்சை செய்ய வேண்டியதில்லை; தெருவில் நின்று கோஷம் போட்டால் அவனை அரஸ்ட் செய்து தண்டனை விதிக்கலாம். இந்த ஹிம்சைச் சட்டத்திற்கு கிரிமினல் லா சீர்திருத்தச் சட்டம் என்று பெயர்!

* * *

நமது தமிழ்நாடு பெயர் வைப்பதில் பேர் போனது. ஸ்வரூபம் கொஞ்சம் முந்திப்பிந்தி இருந்தால்கூட பெண்ணுக்கு மகாலக்ஷ்மி என்று பெயர் கொடுப்பதும் நீர் வரண்ட ஊருக்கு "தாமரைக்குளம்" என்று பெயர் வைப்பதும் நமக்குப் புதியதல்ல. இப்படியெல்லாம் இருக்கும்போது ராஜீயக் கொள்கைகளுக்குப் பெயர் வைக்கும்போது தமிழர்களைக் கேட்டுக்கொண்டு வைக்கக் கூடாதா ?

பக்ஷணம் சம்பந்தமாக மற்றொரு கதையும் உண்டு. என்றுமில்லாத திருநாளாக ஒரு தாயார் செல்லமாக பிள்ளையைக் கூப்பிட்டாள். பையன் திடுக்கிட்டு ஓடி வந்தான். "பக்ஷணம் கொஞ்சம் சாப்பிடேன்" என்றாள். "பக்ஷணம் என்றால் என்ன அம்மா!" என்றான் பையன். பக்ஷணத்தைப் பார்த்திராத குழந்தையைப்போல் சந்தோஷத்தையும் சுகத்தையும் பார்க்காதவர்கள் நமது குடியானவர்கள். அவர்களுக்கு அழகான சொல் தொடர்கள் வேண்டியதில்லை. கொள்கைகளைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. அவர்களுக்கு வேண்டியது இரண்டு வேளை சாப்பாடு. உடுக்கத் துணி, படுக்க வீடு, வாழ சுதந்திரம். இவைகளை எந்தக் கொள்கை கொடுப்பதாயிருந்தாலும் அந்தக் கொள்கையை அவர்கள் ஆதரிப்பார்கள்.

* * *

ஆகாசத்தில் கருடன் வட்டமிட்டுக்கொண்டிருந்தது. கீழே வைத்திருந்த அந்தப் பொட்டியிலிருந்த ஆகாரத்தை எடுத்துக் கொள்ள முயன்றது.

"ஏய்! சீக்கிரம் தூக்குடா. அதோ பார் மேலே" என்றான் அருகில் நின்ற செம்படவன்.

"சீ! 'ஏய்' யாம் 'ஏய்'! உங்க வீட்டு கூலிக்காரன்னு பார்த்தியோ." என்றான் வாயாடியான பொட்டிக்காரன். இரண்டு பேரும் வசைமாரியில் இறங்கவே, அந்த ஸ்வாரஸ்யத்தில் கருடன் 'லபக்'கென்று பாய்ந்து ஆகாரத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டது.

கடற்கரையில் சில தினங்களுக்கு முன் பார்த்த இந்த சம்பவம் இப்போது ஞாபகம் வருகிறது. அனுவசியமான வாய்ப்பேச்சில் இறங்கி கடைசியில் பறிகொடுத்த பொட்டிக்காரன் மாதிரி கொள்கைகளிலும் வார்த்தைகளிலும் இறங்கி அரசியல் வாதிகள் நாளை வீணாக்கிக் கொள்ளட்டும். கட்சி பிரதிகட்சி சண்டைகளில் முக்கிய பிரச்னைகளை மறந்து போகட்டும். அப்படி மறந்தால் தானே கொஞ்ச நாள் கழித்தாவது தவறை உணர்ந்து திருத்திக் கொள்வார்கள்? குட்டுப் பட்டால் ராஜீய வாதிகளுக்குப் புத்தி தானாகவே வருகிறது. ஏனென்றால் குட்டுப் படாமல் தெரிந்து கொள்ளும் ராஜீய வாதிகள் பூலோகத்தில் இல்லை.

---

(669-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்குத் தெரியாதா? நம்பளைப் போலே புருஷா அசட்டுப் பிசட்டுன்னு ஒத்துக் கொள்ளுவாளா? ஆத்து வாசலிலேயே அடிச்சுப் பிடுங்கிக்கிண்டு போறதுன்னா அவமானமா யிருக்காதோ? மூஞ்சிமட்டும் கேக்கச்சே அசடுதட்டித்து. திருட்டுப் போனது ஒண்ணும் பொய்யில்லை. வாஸ்தவம்தான்னு மனசிலே நினைச்சுக்கிண்டு வந்தேன்" என்றாள்.

இவ்வண்ணம் இத்திருட்டுப் பயம் கிளம்பி ஓய்வதற்கு ஒரு மாதத்திற்கு மேலாயிற்று. இந்த விநோதங்களெல்லாம் பட்டண வாசங்களில் நீங்கள் பார்க்க முடியுமா சொல்லுங்கள்.

# தோப்போரம்

(ஸ்ரீமதி செல்லம்)

கமலமும் நானும் அண்ணன் தம்பி ஸம்ஸாரங்கள். எனக்கு எட்டு வயதிலும், அவளுக்கு ஏழு வயதிலும் விவாகம். பால்ய விவாகத்தைப்பற்றி இன்று வரையில் நாங்கள் இருவரும் சிந்தித்தது கிடையாது. எங்கள் பால்ய முழுவதும் ஒன்ருகவே கழித்தோமென்னலாம். எங்களைத் தனிமையில் காணவே முடியாது. எங்கள் புக்ககம் ஓர் கிராமம். நாகரீகம் மிகுந்த பட்டண வாஸத்தில் பிறந்த எங்களுக்குக் கிராம வாழ்க்கை கூண்டிலிருந்து வெளிவந்த பக்ஷியினுடையதுபோலிருந்தது. தோப்புக்களில் மத்தியான வேளை எல்லாம் சுற்றித்திரிவோம். வாய்க்காலுக்குப் போய் வருகிறேமெனக் கூறி கிளம்பிவிட்டோமேயாகில் திரும்புவது எங்கள் இஷ்டம். வீட்டிலிருந்து ஆள்தேடிக்கொண்டு வந்தால் தான் திரும்புவோம். எங்களுக்கு மாமியார் வீட்டில் சலுகை அதிகம். இல்லாவிடில் புள்ளிமான் போல் துள்ளிக்குதிக்க முடியுமா?

காலச் சக்கரம் சுழன்றுகொண்டேயிருப்பதால், என் மனதிற்கு உகந்த வாழ்க்கையை அது அடியுடன் நீக்கி பட்டண வாஸங்களிலேயே பத்து வருஷங்கள் கழிக்கச்செய்தது. ஆனல் நாங்கள் கூடிக் குலாவிய தோப்போரம் மாத்திரம் என் மனதை விட்டு அகன்றதே கிடையாது. சமீபத்தில் என் கிராம வாழ்க்கையைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது. அதே கமலம் பழைய களங்கமற்ற அன்புடனேயே என்னை வரவேற்ருள். என் வாழ்க்கையின் சுகதுக்கங்கள் யாவும் அவளுடைய சகவாசத்தில் மறந்தேன். பழைய நாட்களில் நடந்த விஷயங்களைப் பேசிப் பேசி மகிழ்வோம்.

ஒரு நாள் வேலைகளைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு, பழைய தோப்போரங்களில் சுற்றித் திரிவதென்று வீட்டிலிருந்து கிளம்பினேம். கமலம், தான்வைத்திருக்கும் அந்திமந்தாரைச் செடியைப் பற்றியும், பாக்குக் கன்றுகளைப் பற்றியும், தான் இன்னும் ஆராய்ச்சி செய்திருக்கும் மற்ற தாவரவர்க்கங்களைப்பற்றியும் கூறிக்கொண்டு வந்தாள். நான் ஆச்சரியமுடன் அவள் கூறுவதைக் கேட்டு வந்தேன்.

கால்கள் கடுத்தது. சந்தியா காலமும் சமீபித்தது. பக்ஷி ஜாதிகள் இனிய சப்தத்துடன் தங்கள் கூடுகள் நோக்கி வந்து கொண்டிருந்தன. பசுக் கூட்டங்கள் தங்கள் கன்றுகளை நினைத்துக்கொண்டுவந்தன. குடியானவர்கள் கலப்பை, மண்வெட்டி, இவைகளைத் தோளில் சுமந்துகொண்டு களைப்புடன் வந்துக்கொண்டிருந்தனர். மந்தமாருதம் ஸுகமாக வீசிற்று. இவைகளைக் கண்டு என் மனம் என்னையும் அறியாமல் ஓர் குதூகலத்தையுண்டு பண்ணிற்று. அதுடன், சீக்கிரத்தில் இத்தகைய ஆனந்தமான இயற்கைக் காக்ஷிகளை விட்டு விட்டு நகரவாஸம் அடைந்து காற்றுக்கும்காசு கொடுக்கவேண்டுமே என்ற ஏக்கமும் அடைந்தேன். சிறிது நேரம் இத்தகைய சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன்.

பிறகு "கமலம்! நீ மிக்க ஸுக்ருதம் செய்தவள். உனக்கு இந்த சௌந்தர்யமான இயற்கைக் காக்ஷிகள் சுலபமாகக் கிடைத்திருக்கிறது" என்றேன். என் குரல் கம்மியது. "உனக்கு மாத்திரம் கிடைக்கவில்லையோ? தினம் ஒரு ஸினிமா. ஜோரான பாட்டுக் கச்சேரிகள். போதாக்குறைக்கு "ரேடியோ" ஒன்று. அப்பாடா! எவ்வளவு ஸுகங்கள். இதிலெல்லாம் எனக்குப் பங்கு அளிக்கிருயோ? அவைகளை விட்டு இந்த மாட்டுக் கொட்டிலையும் தென்னந் தோப்பையும் அபாரமாகப்புகழுகிருயே? "கமலம்! சும்மா உருட்டாதே. நகரவாஸத்தில் பெரிய எலக்டரிக் விசிறியின் காற்றும் இந்தத் தென்றலுக்கீடாகுமா? அந்த ஸினிமாவுந்தான் உங்களூரைத் தேடி "டூரிங் டாகீஸாக" வந்து விடுகிறது. எலக்டரிக் லைட்டும், ரேடியோவும் வலிய வந்துவிட்டன. உங்கள் அதிர்ஷ்டம் சென்னையிலும் பெரிய ஸ்டேஷன் ஆரம்பித்துவிட்டார்கள். உங்களுக்கு இருவசதிகளும் இலவசமாய்க் கிடைக்கிறது. எங்களுக்கு இவைகளெல்லாம் எப்படிக் கிடைக்கும்" என்றேன்.

நாங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் சூரியனும் தன் கிரணங்களை மேற்கில் மறைத்துவந்தான். அப்பொழுது ஓர் கிழவன் தள்ளாடிக்கொண்டே வந்தான்.

"அடா! அது யார்! மாயாண்டியா?" என்றேன். "ஆமாம்" என்ருள் கமலம். சென்ற பத்துவருஷங்களில் எப்படி மாறிவிட்டான்! நிமிர்ந்து ஓங்கி வளர்ந்த அவன் உருவம், கூனி; சுருங்கிக் காணப்பட்டது. பிரகாசமும், கூர்மையுமான அவன் கண்கள், பள்ளத்தில் மங்கிக்கிடந்தன. எங்களூர் பள்ளரில் அவன்தான் நிமிர்ந்த குத்தகைக்காரன்.

சுமார் ஐநூறு ஏகர்நிலம் அவன் குத்தகைக்குள் ளிருக்கும். நன்ருய் எழுதப்படிக்கத் தெரிந்த வன். பெரிய மச்சுவீடு ஒன்றுகூட அவனுக் குண்டு. என் மனக்கண்முன் அவன் பழைய உருவம் நின்றது. அவனைப் பார்க்க மிக வும் ஆசைப்பட்டேன். என் இஷ்டப்படி நடக்கும் கமலமும் அவனைக் கூவி அழைத் தாள்.

"யார் அது? சின்னம்மாளா?" எனக் கேட் டுக்கொண்டே அவன் தூர நின்ருன்.என்னைப் பார்த்ததும் "அது யாருங்கறேன்?" என்ருன்.

"அதுதான் சின்னையர் ஸம்ஸாரம். தெரியவில்லையா?" என்ருள் கமலம்.

"ஹா"வென என்னை உற்றுப் பார்த்தான். அவன் கண்களில் பழைய பிரகாசம் சிறிது தெரிந்தது. "தாயே! என் எங்களை அடியுடன் மறந்துவிட்டாய்? ஊரைவிட்டே போய்விட் டாயே? நீ போனபிறகு என்னை லக்ஷியம் செய்வார் ஒருவருமில்லை. எப்பவாவது கூட் டாக்கூட இது திருப்பிக்கிட்டு ஓடும்" என் ருன். அவன் குரல் கம்மியது. முகத்தில் வாத்ஸல்யம் ததும்பியது. எனக்கும் அவ னுடன் பேச மிகவும் ஆவலாய் இருந்தபடி யால் "உன் பிள்ளை பெண்கள் க்ஷேமமா? நல்லம்மா (அவன் ஸம்ஸாரம்) என்ன செய் கிருள்?" என பல கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனேன்.

அவன் முகம் சுண்டியது. "ஐயோ! அந்தக் கதையை ஏன் கேக்கரே? சுமார் ஏழு வருஷ மாய்ப் பெரிய பண்ணைகளெல்லாம் படும்பாடு உனக்குத் தெரியாதா? வெள்ளாமையும் விளையல்லே. சர்க்கார் கிஸ்தி தொந்திரவோ சொல்லி முடியாது. அதெல்லாம் சேர்த்து பண்ணை முதலாளிகள் எங்களைக் கசக்கிச் சார் பிழிந்து விடுகிருர்கள். வருஷா வருஷம் குத் தகைப் பாக்கிக்கு உழவு மாடுகளை எல்லாம் விற்றுக்கொடுத்தேன். பிறகு நல்லம்மா நகை களை எல்லாம் அடகுவைத்துக் கொடுத்தேன். எல்லாம் முழுகிப்போச்சு. திருப்ப வழியில்லை. வட்டிவாசி குடும்பச் சிலவுக்கு வீட்டையும் போக்கியம் வைத்தேன். வரவர சருக்கிக் கொண்டே வந்ததே தவிர ஏற வழியில்லை. இதே ஏக்கத்தால் நல்லம்மாள் செத்தே போனுள். நான் சாகாப் பிணமாய் இருக்கி றேன். அவள் போனபிறகு குடும்பத்தில் ஏக கலதி. ஒண்ணுக்கொண்ணு ஒத்துவரா மல் என் மூத்தமகன் தன் பெண்சாதி யுடன் கண்டிக்கு ஓடிப்போய்விட்டான் மக மருதாயியும் அவள் புருஷனுடன் சிங்கப் பூருக்குச் சொல்லாமல் போய்விட்டாள். நான் ஒண்டிக்காரன் எல்லாப் பண்ணைகளுக்கும் எப்படிப் பாடுபடமுடியும்? எல்லாக் குத்தகை களையும் விட்டுவிட்டேன். நமது பண்ணையில் மாத்திரம் ஐந்து ஏகர் நிலத்தை உழுது அதில் வருவதைக் கொண்டு கால்வயிறு கஞ்சி காய்ச்சிக் குடித்துவிட்டு இந்த மரத்தடியில் படுத்துக் கிடந்து என் காலத்தைக் கழித்து வருகிறேன்" என்று தன் சரித்திரத்தை ஒரு வாருய் கூறிமுடித்தான். அவன் கண்களில் துளித்த ஜலத்தைத் துடைத்துக்கொண் டான்.

என்னுல் தாங்கமுடியாமல் விம்பினேன்.

"அம்மா! தாயே! சும்மாவிரு" எனக் கூறி, என்னைச் சமாதானப்படுத்தினுன். "ஏண்டா! இந்தக் கடன் சட்டத்தால் உனக் கொன்றும் லாபமில்லையா? ஏதாவது வக்கீலை வைத்துக்கொண்டு விவகாரம் நடத்தேன்" என்றேன்.

"இந்தச் சட்டம் வருமுன்னமே நான் எல் லாக் கடன்களையும் ஒழித்துவிட்டேனே. நான் கொடுத்து வைத்தது இம்மட்டுத்தான். பண்ணை எஜமானுக்கு அதால் ரொம்ப லாபமாமே. அதுவே போதும். நீங்களெல் லோரும் சந்தோஷமாக விருந்தால் அதுவே எனக்கும் சந்தோஷமில்லையா?" என்ருன். அவன் இந்த நிலைமையிலும் தன் நலத்தைக் கருதாமல் அவன் பேசியது, என் மனதை உருக்கியது. அவனிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்தபிறகும் என் மனம் அவனையும் அவன் குடும்பத்தா ரையும் எண்ணியே அலைகிறது. ஆ! மாயாண் டியின் தியாகம் எப்படிப்பட்டது!

பிரதி தினமும் சாயங்காலம் தோப்போரம் மறக்காமல் சென்று மாயாண்டியுடன் சிறிது நேரம் சம்பாஷித்தால்தான் என் மனம் நிம்மதி அடையும். தோப்போரம் ஓர் தேவாலயம் போல் என் மனதைப் புனிதமாக்கிற்று.

# பெற்ற மனம்

(கேஸரி)

வீடு நிசப்தமாக இருந்தது. குழந்தைகள் எல்லாம் எதிர்வாடையில் இருக்கும் மாமா வீட்டுக்குப் போயிருந்தன. குமுதத்தின் புருஷன் கண்காணிப்பதற்குக் களத்துக்குப் போயிருந்தார். அவளும் தங்கமும்தான் அப்போது வீட்டில் இருந்தார்கள்.

வெண்கலப் பானையில் ஜலம் கொதித்து "சொய்" என்று சப்தம் செய்தது. இடுப்பளவு உயரமுள்ள அம்மியில் வெகு சிரமப்பட்டுத் தன்னையே மறந்து அறைத்துக்கொண்டிருந்த குமுதத்துக்கு உடனே அரிசியைக் களைந்து போட வேண்டுமென்ற பிரக்ஞை வந்தது.

கைகளைக் கழுவிக் கொண்டு முறத்துடன் அரிசி வைத்திருக்கும் தாழ்வாரத்து அறைக்குள் போக அடி எடுத்து வைத்தாள். சமையலறையைத் தாண்டித் தாழ்வாரத்துக்கு வந்ததும், ஒரு சப்தம் அவள் காதில் விழுந்தது. அது இன்னது என்பதை உடனே அறிந்தாளானாலும் உண்மையை அறிய மெள்ள நடந்து தாழ்வாரத்தறைக்குள் எட்டிப்பார்த்தாள். ஏற்கெனவே தணலாக இருந்த அவள் துக்கம் இப்பொழுது கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. தங்கம் அந்த அறையில் ஒரு சாய் நாற்காலியில் படுத்துக் கொண்டிருக்கிறாள். சிறிது நேரத்திற்கொருதரம் அவள் விட்ட பெருமூச்சு அறைக்கு வெளியில் நிற்கும் தாயாருக்கு அனல் காற்றாக வீசிற்று. அவள் மார்பு விரிந்தது.

"எவ்வளவு நாளைக்குத்தான் இந்தத் துக்கத்தை யனுபவிப்பது" என்று கிலேசப்பட்ட ஹிருதயம் அவள் மார்பைப் பிளந்துக் கொண்டு போக எத்தனித்தது. அடிக்கடி கண்களைத் துடைக்க உபயோகப் பட்டதனால் ஈரமாக இருந்தது அவள் புடவைத் தலைப்பு. நெருப்பிலிட்ட தாம்பரம் போல் சிவந்து காணப்பட்டது முகம். ஈரக் கூந்தலைக் காய்வதற்காக அவிழ்த்து விட்டிருந்தாள். கடைசியாக ஒருதரம் கண்களைத் துடைத்துக் கொண்டு 'வட வட' வென்று உதறும் குரலில் "ஈச்வரா" என்றாள் தங்கம்.

அறைக்கு வெளியில் நின்றவள் அப்படியே தூண்போல் ஆய்விட்டாள். தன் பெண் படும் துயரம் தொத்துமோ என்னவோ? அவள் கண் விழிகள் நேராகச் சுவற்றைப் பார்த்தன. கண்ணீர் பார்வையை மறைத்தது. வெண்மையான சுவற்றில், சினிமாத் திரையில் படம் காணப்படுவதுபோல், சில பூர்வ சம்பவங்கள் தென்பட்டன.

இருபத் தோராவது நாளிரவு. பனி ரெண்டு மணி இருக்கும். ஊர் 'அல்லோல கல்லோலப்' படுகிறது. "ஹூம், நல்லவாளை யெல்லாம் தெய்வம் கொண்டு போய்விடுகிறது. பாவிகளை யெல்லாம் இந்தக் கலியுகத்திலே தெய்வம் ஒன்றும் செய்கிறதில்லை" என்றொரு சிலர் பேசிக் கொண்டார்கள். "அறியாத பசங்களுக்குத்தான் வரது. என்னைப் போல இருக்கிற கிழங்களுக்கெல்லாம் ஆய்சு குட்டிச்சுவருக்கு ஆகாரப் போலே விருத்தியாகிறது. நேத்திப் பெண், அவளுக்குப் பாரேன் அல்பாய்சு" என்று ஒரு கிழக்கூட்டம் வருந்தும். இப்படியாகக் குமுதம் பிழைக்கமாட்டாள் என்று ஊரெங்கும் கவலை.

ரேழியில் குமுதத்தை உயிருள்ள பிணமாக நீட்டி வைத்திருந்தது. யமனுக்கு வழி காட்டுவதுபோல் மங்கலாக எரிந்தது ஒரு விளக்கு. குழந்தைகள் எல்லாம், தாயார் செத்துப் போகப் போகிறாளே என்ற துக்கம் ஒரு பக்கம், தாய் எதிரில் போக பயம் ஒரு பக்கமாக, கூடத்தில் படுத்துக் கொண்டிருந்தன. அவைகளை ஆறுதல் சொல்ல சின்னக்கா கூடவே படுத்துக் கொண்டிருந்தாள்.

கிரகணம் பிடித்த சந்திர வெளிச்சம் போல் மங்கின ஒளியில் குமுதத்தின் தலைமாட்டில் உட்கார்ந்திருந்தாள் மூத்த மகள் தங்கம். இடது கைப்பக்கத்தில்

கண்ணைத் துடைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவள் தாய். வலது பக்கத்தில் "மோசம் பண்ணிவிடுகிறாயே" என்று சொல்லிக் கொண்டே அழுது கொண்டிருந்தார் மாமனார். கால் மாட்டில் முனகிக் கொண்டு உட்கார்ந்திருந்தார் அவள் புருஷன்.

ஒரே ஒரு குறைதான் அவளை வெகு நாளாய் வாட்டிக்கொண் டிருந்தது. அந்தக் குறையினால் தான் போலிருக்கிறது. அப்போது உயிர்கூட உடலைவிட்டுப் பிரிய மனமில்லாமல் இருந்தது. அந்தக் குறையைத்தான் தன் அந்திய காலத்தில் தீர்க்க முயன்றாள்.

"அம்மா தங்கம்......"

"ஏம்மா, என்ன வேணும்? கஞ்சி குத்தட்டுமா?" என்று பேதைத் தங்கம் உபசாரம் செய்தாள். ஆனால் உண்மையில் தாயார் கஞ்சிக்காக கூப்பிடவில்லை. அவள் மனதில் தங்கத்தைப்பற்றி இருந்த குறைதான் கூப்பிடச் சொல்லிற்று. கூப்பிட்டு என்ன பேசுவது? பேச வாய் வந்தாலல்லவோ? வெகு சிரமப்பட்டு "மாப்பிள்ளையைக் கொஞ்சம் கூப்பிடுங்களேன்" என்றாள்.

அப்போதுதான் சென்னையிலிருந்து வந்திருந்த தங்கத்தின் புருஷன் மாமியார் எதிரில் வந்தான். அவளருகில் உட்கார்ந்தான். அவளுக்குக் கடைசி காலத்திலாவது இன்ப வார்த்தைகள் சொல்ல மனம் வந்தது அவனுக்கு. அதுதானோ என்னமோ அவள் புனர் ஜென்மம் எடுத்ததற்குக் காரணம்.

"நான் ஒன்று சொன்னால் கோபம் வருமோ" என்று சொல்லி முடிக்க ஐந்து நிமிஷங்கள் ஆயின அவளுக்கு.

"என்ன, சொல்லுங்கள்."

"சொல்லலாமா?"

"என்ன சொல்ல வேணுமோ சொல்லுங்கள். ஒன்றும் யோசனை வேண்டாம்."

"ஹூம்..."

"என்ன பேச முடியவில்லையா?"

"இல்லை......கொஞ்சம் இருங்கோ சொல்ரேன்" என்று சொல்லி முடிக்க பகிரதப்ரயத்னமாகப் போயிற்று அவளுக்கு.

"சரி மெள்ள சொல்லுங்கள்" என்று ஆவலுடன் உட்கார்ந்திருந்தான் மருமகன். எல்லோரும் கண்ணீர் உகுத்த வண்ணம் உன்னிப்பாய்க் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

"இதோ இருக்கிறதே" என்று சொல்லிக்கொண்டே தங்கத்தின் கையைப் பிடித்தாள்.

"இதுதான் என் கண். நானும் பேட்டேனா...இது பாவம்... பரதேசியாக இருக்குமே. இதைக் கொஞ்சம் பெரிய மனசு பண்ணி...சௌக்கியமாக வச்சிருக்கணும்."

"அப்படியே ஆகட்டும்," என்று பதில் சொன்னான் மாப்பிள்ளை.

அதற்குமேல் அவள் ஒன்றும் பேசவில்லை. தங்கம் இதைக் கேட்டுத் தலை குனிந்துகொண்டாள். மருமகனுக்கு நல்ல குணம் உதயமாயிற்று. ஐந்து வருஷமாக வயது வந்த பெண்ணைக் கண்ணெடுத்துக்கூட பார்க்காமல் தன்னிஷ்டப்படி சென்னையில் திரிந்தது தப்பென்று தோன்றிற்று.

ஆனால் இப்படி உதயமானது சீக்கிரத்திலேயே அஸ்தமித்துவிட்டது; அவன் மனம், குளிர்ந்த ஜலம் எப்படி காய வைத்த சிறிது நேரத்துக்கெல்லாம் பழையபடி குளிர்ந்து விடுகிறதோ, அது போல மாறிவிட்டது. தங்கத்தைக் கவனியாமலேதான் "காளை மாதிரி திரிந்தான்."

இப்படி எல்லாம் படம் பார்த்துக் கொண்டிருந்த குமுதத்தை திடீரென்று எழுப்பிற்று ஒருமுனகல். திரும்பி உடனே பெண் எதிரில் உள்ளே சென்றாள்.


"என்னம்மா, தங்கம்?"

"ஒன்றுமில்லை" என்று சட்டென்று முகத்தை அந்தப்புறம் திருப்பிக்கொண்டாள்.

"ஏன் அம்மா இந்த மாதிரி ராவும் பகலும் வருத்தப்படரே? என்னமோ ஈசன் விட்ட வழி ஆகிறது..."

"ஒன்றும் இல்லேம்மா" என்று சொல்லிக்கொண்டே நன்றாகத் துடைத்த முகத்தை நிமிர்த்தித் தாயாரைப் பார்த்தாள். கண்கள் கோவைப் பழம்போல் சிவந்திருந்தன. முகம் துவண்டு கிடந்தது; அவள் முகத்தில் ஏக்கம் தேங்கிற்று.

ஒரு நிமிஷம்தான் தாயாரைப் பார்த்தாள். ஊற்றுப் போல் கண்களில் கண்ணீர் வர ஆரம்பித்தது. உடனே அதை மறைக்கக் கீழே நோக்கினாள். அவள் கண் கொட்டாத பார்வை பூமியைப் பிளந்து கொண்டு போகும்போல் இருந்தது.




## பூர்வ கதை

பெரிய பணக்காரரான கண்டிராக்டர் லம்போதர முதலியார் மனைவியை இழந்தவர். தன் தாயார், பிள்ளை, மருமகள்—இவர்களுடன் வசித்து வந்தார். முதலியாரின் தாயார் தேவானையம்மாள் தாயற்ற குழந்தைகள் இருவரையும் அன்பாய் வளர்த்து வந்தாள். மருமகள் புனிதவதியின் தாயார் சிறுவயதிலேயே காலமாய் விட்டபடியால் அவளை வளர்க்கும் பொறுப்பு முதலியார் பேரில் விழுந்தது. புனிதவதியும் முதலியார் புத்திரனான தணிகைவேலனும் ஒரே வயதினர். சேர்ந்தாற்போல் காலேஜுக்குப் போவார்கள். எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள். புனிதம் தணிகைவேலனைக் காதலித்தாள்.

இந்த சந்தோஷமான குடும்பத்தை விட்டுவிட்டு அடுத்த வீட்டுக்கு வருவோம். அது பாப்பாத்தியம்மாள் வீடு. சிறு வயதில் பாப்பாவை லம்போதர முதலியாருக்குக் கொடுப்பதாயிருந்தது. ஆனால் பாப்பாவின் தாயார் மறுத்துவிட்டாள். பாப்பாவின் துரதிருஷ்டம் எங்கே போயிற்று? கடைசியில் அவள் ஓர் குடிகார ஜாகீர்தாருக்கு வாழ்க்கைப்பட்டு விதவையானாள். பாப்பாவுக்கு ஒரு பெரிய புதல்வனும் இரு சிறு குழந்தைகளும் உண்டு. சிவக்கொழுந்து என்பவன் அந்த மூத்த சற்புத்திரன்! அவன் போகாத சினிமாக் கொட்டகை பாக்கியில்லை! குதிரைப் பந்தயமில்லை! இதனால் பாப்பா மனம் புழுங்கினாள்.

புனிதம் தணிகைவேலனைக் காதலித்தாளல்லவா? ஆனால் தணிகைவேலன் தன்னைக் காதலிக்கிறானா என்பதை அவளால் அறிய முடியவில்லை. ஒரு நாள் மாலை டென்னிஸ் விளையாடிவிட்டு வந்த தணிகு தோட்டத்தில் சண்பக மரத்தடியில் தலையைக் கோதிக்கொண்டு உல்லாசமாய் உட்கார்ந்திருந்த புனிதத்தைச் சந்தித்தான். ரகஸ்யமாக ஒரு கேள்வி கேட்க விரும்பினான்.

புனிதத்தின் வகுப்புத் தோழியான சிவகாமியை தனக்கு அப்பா நிச்சயம் செய்திருக்கிறாரென்றும் அவள் எப்படிப்பட்டவளென்றும் அவன் புனிதத்திடமே கேட்டால் திகைப்பை உண்டாக்காமல் என்னசெய்யும்? இயந்திரம்போல் புனிதம் ஏதோ பதில் சொல்லி வைத்தாள். தணிகு போனதும், புனிதம் வருத்தம் தாங்காமல் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தாள்.

அந்த சமயத்தில் முதலியார் அங்கே வந்து தணிகுவின் நிச்சயதார்த்தத்திற்கு எல்லோருடனும் வரும்படி அவளை வற்புறுத்தி அழைத்துப் போனார். அன்றிரவு புனிதவதிக்குத் தூக்கமே வரவில்லை. துக்கம் தாங்காமல் விம்மி அழுதாள். தணிகைவேலன் அவள் அறைக்கு வந்து அவளைத் தேற்றினான். காலஞ்சென்ற தாயாரின் ஞாபகம் வந்ததால் புனிதம் வருந்துகிறாள் என்று எல்லோரும் நம்பினார்கள். உண்மையான காரணம் புனிதத்தைத்தவிர வேறு யாருக்காவது தெரியுமா? ஆம்; அதனுடைய சாயை தணிகைவேலன் ஹிருதயத்தில் கூடப் பிரதிபலித்தது. இல்லாவிட்டால் அவன் ஏன் படுக்கையில் படுத்துக்கொண்டு தூக்கம் வராமல் வேதனைப்படவேண்டும்? அவள் துயரம் அவன் மனதை ஏன் வாள்கொண்டு அறுக்க வேண்டும்?

புனிதம் அன்றிரவு தற்கொலை செய்துகொள்வதென்று தீர்மானித்தாள். கடைசியாக ஒருதடவை தணிகுவைப் பார்ப்பதற்காக அவன் படுக்கையறைக்குப் போனாள். தணிகு திடுக்கிட்டு விழித்துக்கொண்டு 'எங்கே வந்தாய்?' என்று கேட்க அவன் முனகிய சப்தம் கேட்டுத்தான் வந்ததாகக் கூறினாள் புனிதம். அந்த க்ஷணத்தில் அவள் முன் செய்த தீர்மானம் மெதுவாய் மறைந்தது. துயரம் வருவதெல்லாம் ஆசையால்; ஆகையால் ஆசையைக் களைந்துவிட்டால்......என்று கேட்டுக்கொண்டாள். ஆகவே பற்றைத்

துறந்த ஓர் சந்நியாசியாகக் காலங்கழிக்கத் துணிந்தாள் புனிதம்.

இரண்டு வருஷங்கள் ஓடி மறைந்தன. புனிதம் கல்யாணத்தை மறுத்துக் காலந் தள்ளியது தேவானையம்மாளுக்குக் கோபமாயிருந்தது. ஆனால் அவள் கோபம் புனிதத்திடம் சாயவில்லை.

## 7

## விரக்தி

அன்றிரவு சாப்பிடும்போது கலியாணப் பேச்சு எடுத்தார் முதலியார். முதலியாரும் தணிகுவும் தேவானையம்மாளும், பேசியபடியே சாப்பிட, புனிதம் பரிமாறிக் கொண்டிருந்தாள். சிவகாமி குழந்தை பொன்னையனைத் தூங்கவைத்துக் கொண்டிருந்தாள். கலியாண விஷயத்தைப்பற்றி இவர்கள் எவ்வளவோ பேசியும் அவள் ஒன்றிலும் ஒட்டாமல் ஏதோ பதில் சொல்லிக் கொண்டே இருந்தாள். அவள் மனதில் தாங்க ஒண்ணாத துயரம் தோன்றுவதைக் கண்டுவிட்டார் முதலியார்.

பளிச்சென்று மின்னல் போல் ஒரு நொடியில் அவருக்கு விஷயம் விளங்கி விட்டது. இவ்வளவு நாளாய்ப் புரியாத விடுகதை இப்பொழுதே அவர் மூளைக் கெட்டிற்று. தன்னைத் தானே இகழ்ந்து கொண்டார். தன் மன நிலையை வெளியில் காண்பித்துக் கொள்ளக் கூடாதென்று எண்ணியவராய் வேறு எதையோ பேசலானார்.

புனிதமும் சிவகாமியும் உட்கார்ந்து பேசிக்கொண்டே சாப்பிட ஆரம்பித்தார்கள். சிவகாமி தன் தகப்பனார் சொல்லியிருந்த, கற்றுக் கொடுத்த பாடங்களையெல்லாம் ஒப்பித்தாள். அவை ஒவ்வொன்றிற்கும் அவளுக்குச் சரியான பதில்களைச் சொல்லிக் கொண்டே வந்தாள் புனிதம். அவளுக்குமேல் பேசத் தெரியவில்லை. "அக்கா! அத்தான் வக்கீலுக்குப் படிச்சதை நீங்கள் படித்திருக்கலாம்" என்று கபடமற்று கலகலவென்று சிரித்துக் கொண்டே சொன்னாள் சிவகாமி.

"படித்திருக்கலாமென்ன? படித்தால் போயிற்று. மேல வருஷம் லா காலேஜிற்கு மனுப் போடட்டுமா?" என்றாள் புனிதம். "ஐய்யய்யோ? பாட்டியம்மா காதிலே பட்டால்......" என்று சிரித்தாள் சிவகாமி.

சிவகாமி பலமுறை தணிகைவேலனிடம் புனிதத்தின் விவாக விஷயமாகவோ, அல்லது பொதுவாகவோ கேட்பாள். அதில் ஒரு கேள்விக்காவது சரியானபடி பதில் சொல்ல அவனால் முடியாது. ஆனால் பொதுவாக, புனிதத்தைக் காணுவிடில் எங்கே எங்கே என்பான். புதிதாய் வந்த பொழுது சிவகாமி இதைப்பற்றிக் கொஞ்சம் விபரீதமாய் சந்தேகப் பட்டதும் உண்டு.

வீண் சந்தேகம், ஆதாரமற்ற சந்தேகங்கள் எவ்வளவு நாள் நிற்கமுடியும்? நாள் செல்லச் செல்ல, புனிதத்தை ஒரு கடவுளாய்க் கருதி விட்டாள் சிவகாமி. சொற்களாலும் செயலாலுமல்ல, தனது மெய்யன்பினாலேயே அந்தப் பெண்ணின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டாள் புனிதம். அவள் தனக்குச் சொல்லும் புத்திமதிகளும் உபசரணைகளும் தனக்கும் தன் கணவனுக்கும் குழந்தைகளுக்குமாக எல்லையற்ற உள்ளன்புடனும், பரிவுடனும் பாடுபடுவதும் சிவகாமியின் மனதைக் கொள்ளை கொண்டன.

'அக்கா! அக்கா!' என்று எந்தச் சிறு வேலையையும் கூட அவள் அனுமதி பெறுமல் செய்யமாட்டாள். "அக்கா! இன்று எந்தச் சேலை உடுத்திக் கொள்ளட்டும்?" என்று கேட்பாள். அவளைக் கேட்பதனால் தனக்குத் திருப்தியும் ஆனந்தமும் ஏற்படுவது எதனால் என்று சிவகாமி பலமுறை சிந்தித்ததுண்டு.

"அக்காவுக்கு அவருடைய குணம் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. அவளுக்கு எது விருப்பம், எது வெறுப்பு என்று கூட நன்றாய்த் தெரிந்து வைத்திருக்கிறார். குழந்தைப் பருவம் முதல் பழகியதல்லவா? அவர் எண்ணுவதையும் எண்ணப் போவதையும் கூடச் சொல்லிவிடுகிறாரே. உண்மையில் அவர் இவ்வளவு பரிவுடன் ஒவ்வொன்றையும் எடுத்துச் சொல்லித் திருத்தாவிட்டால், என் கோபத்திற்கு ஒருநாள் கூட இந்த வீட்டில் வாழ முடியாது. அவருடைய உதவியும் புத்திமதியுமில்லாமல் நான் தனித்திருந்தால் தெரியும், படும்பாடு. என்னால் பொறுத்து ஒரு நிமிஷம் ஏதேனும் செய்யமுடியுமா? படபடவென்று கோபித்து வீண் வசைகளையும் வெறுப்பையும் தான் அடைந்தி

ருப்பேன். இதற்காக அக்காவுக்கு என் தோலேயே செருப்பாய்த் தைத்துப் போட வேண்டாமா?'' என்று தானே சொல்லிக் கொள்ளுவாள் சிவகாமி.

சம்பந்த முதலியாரும் அவர் மனைவியுங் கூட "அம்மா! புனிதம் தங்கமான பெண். உன் சிடுசிடுப்பை அவளிடம் காட்டி விடாதே. அவளைப் போல் உன்னால் ஒரு நிமிஷம் இருக்கமுடியுமா? அவள் எப்படி தக்கார்க்குத் தக்கபடி நடக்கிறாள் பார். அவளைப்போல் நல்ல பெயரெடுத்துக் கொள். உன் படபடப்பை அங்கே காண்பித்தாயோ, பிறகு அந்த வீட்டு வழியே நாங்கள் வரவே மாட்டோம்'' என்று, தான் புக்ககம் வருமுன் எச்சரித்ததை நினைத்துக் கொள்வாள்.

அன்றிரவு வெகுநேரம் வரையில் கலியாண விஷயமாய் தானும் புனிதமும் பேசிக் கொண்டிருந்ததைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். பாவம் தணிகு தன்னாலான வரையிற் சிந்தித்துப் பார்த்தான். புனிதத்தின் குணத்தையும், அவள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாறுதல்களையும் பற்றி அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எப்படி விளங்கும்?

"அக்கா! நீங்கள் ஏன் ஒருநாள் கூட சரிகைச் சேலை கட்டிக்கொள்ளவே மாட்டேனென்கிறீர்கள்? புதியதாய் வாங்காவிட்டாலும் போகிறது. இருப்பவைகளை யாவது கட்டிக்கொள்ளக்கூடாதா? பெட்டியில் வைத்துப் பூச்சி அரித்து வீணாய்ப் போகிறதே. நூறு நூறாய்க் கொட்டி வாங்கி வீணாய் மக்கிப் போவதென்ன லாபம்? இன்று நீங்கள் உமாபதி முதலியார் வீட்டுப் பூ முடிப்புக்குக் கராச்சி சேலைதான் உடுத்துக்கொண்டு வரவேண்டும். என்னை மட்டும், இதை வாங்கிக்கொண்டால் நன்றாயிருக்கும், அது அழகாயிருக்கிறது, அவருக்குப் பிடிக்கும் என்று சிபார்சு செய்கிறீர்களே'' என்று கேட்டாள் சிவகாமி.

"நீயும் என்னைப்போலவே கதர் உடுப்பதானால் எனக்குச் சந்தோஷம்தான். மாமாவுக்கும் தணிவுக்கும் நீ விதவிதமான அலங்காரங்கள் செய்துகொள்ள வேண்டுமென்று விருப்பமிருக்கலாம். நேற்றுக் கூட தணிகு ஆகாச வர்ணத்தில் கருப்புக் கரை சேலை நன்றாயிருக்கிறது என்று எடுத்து வைக்க வில்லையா? அவனுக்கு இஷ்டமிருப்பதை ஒட்டித்தானே நீ நடக்கவேண்டும்? அதனால் உன்னைக் கதர் உடுத்தும்படி நான் வற்புறுத்தவில்லை. கொஞ்சம் போனால் அவனுக்கே கதர்ச் சேலை வாங்கவேண்டுமென்று தோன்றினாலும் தோன்றலாம்.

"மொத்தத்தில் பட்டு உடுத்துவது ஜீவ ஹிம்ஸைதானே? ஒரு புடவை அழகுக்காக நாம் உடுத்துவதற்கு எத்தனை கோடி பட்டுப் பூச்சிகள் சாகவேண்டும் தெரியுமோ? கேவலம் அந்தப் பளபளப்பிலே தான் மயக்கம். பட்டு மடி, யோசித்துப் பார்த்தால் இது வெறும் பிரமைதான். நீயே சொல். நூறாயிரம் பூச்சிகளைக் கொன்று செய்த ஒரு பொருள் எப்படி மடி? என்ன விதத்தினால் பருத்தியை விட உயர்வு?''...என்று சொல்லிக்கொண்டிருக்கையில்...."அடியே சிவகாமு. என்ன கொட்டமடிக்கிறீர்கள்? குழந்தை அழுகிறானே, காது கேட்கவில்லையா?'' என்று தேவானையம்மாளின் குரல் கேட்டது.

சிவகாமு ஒரே ஓட்டமாய் ஓடிக் குழந்தையை எடுத்துத் தோளில் சாத்தியவளாய் "அது சரிதான். எனக்கு மட்டும் அந்த நியாயமெல்லாம் கிடையாதா?'' என்றாள்.

"உன் சங்கதி வேறு. அவனுக்குத்தான் உடையிலும் வீண் ஆடம்பரத்திலும் அசாத்யப் பைத்தியமாயிற்றே? நீ ஏதாவது சொன்னாயோ உன்னை நான் கெடுத்து விட்டேன் என்பான். என் விஷயத்தில் அப்படிப்பட்ட அவசியங்கள் ஒன்றுமில்லை. என் இஷ்டப்படி நடந்து கொள்ளலாம்'' என்று நிறுத்தினாள் புனிதம்.

"ஆமாம், அக்கா! உங்களுடன் வாதிப்பதற்கு எனக்கென்ன தெரியும்? சொல்லுவதையெல்லாம் ஆமாம், ஆமாம், என்று தலையசைத்துக் கேட்டுக் கொண்டிருப்பேன். வேறு எனக்கென்ன சொல்லத் தெரியும்?'' என்று கூறியவளாய் குழந்தையைத் தூக்கிப் புனிதத்தின் மடியின்மேல் வைத்துவிட்டு உட்கார்ந்தாள் சிவகாமு.

"சிவகாமி, இங்கே பார்! இந்தப் பயலைக் குண்டோதரன் என்று கூப்பிடட்டுமா?''

"எப்படித் தோன்றுகிறதோ அப்படிக் கூப்பிடுங்களேன்''

"இல்லே. மாமாவை சிவபாத முதலியார் குண்டோதரன் என்றுதான் கூப்பிடுவார். இல்லாவிட்டால் 'வெற்றிலே' என்று கூப்பிடட்டுமா? அது இலக்கணத்தில் வெள் + இலே என்று விரியும்" என்று விஷமச் சிரிப்புடன் சொன்னாள் புனிதம்.

"ஐய்யைய்யோ! மாமா வரப்போகிறார்கள்" என்று சிவகாமு சொல்லுகையில், "ஜெய் சீதாராம். சூர்ய பகவான், சந்திர பகவான், அகஸ்திய பகவான்" என்று கூவிக்கொண்டே வந்தாள் கற்பகம்.

"அட ராமா! இன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் இந்தப் பாடந்தானா? இங்கே வா, அம்மா" என்று சொல்லிக்கொண்டே கற்பகத்தை அருகே அழைத்து அணைத்த வண்ணம் முன்னெற்றியில் தொங்கும் குழலேக் கோதிவிட்டாள் புனிதம்.

அவள் தன் கையிலிருந்த சிறு சொப்பில் குங்குமத்தை எடுத்து "எங்ககத்திலே பொம்மைக் கல்யாணம். நீங்கள் எல்லோரும் கட்டாயம் வர வேண்டும்" என்று அழைத்தாள்.

குழந்தை லம்போதரன் தனது ஊமை வார்த்தைகளால் அந்தச் சொப்பைத் தனக்குக் கொடுக்கும்படி கெஞ்சிக் கேட்கலானான். அவனது செய்கைகளின் கருத்து விளங்காதவளாய் சிவகாமி "அக்கா! இப்படிக் குதிக்கிறானே. நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். என்னே யானே கட்டிய தறியாய் ஆக்கி விடுகிறானே" என்று மீண்டும் புனிதத்தினிடம் கொடுத்தாள்.

"அவனைக் கீழே விடு. என்ன செய்கிறான் பார்ப்போம்" என்றாள் புனிதம்.

அவ்வளவுதான் ஒரே தாவலாய்த் தாவி, சொப்பு காகிதம் எல்லாவற்றையும் ஒருங்கே பறித்துக் கொண்டான் குழந்தை. இதற்குள் தண்ிகை வேலன் வர, சொப்புக்கள் போனதையும் பொருட்படுத்தாதவளாய் "அப்பா வந்து விட்டார்" என்று குதித்துக்கொண்டே ஓடினாள் கற்பகம்.

## 8

## புயற் காற்று

நாட்கள் சென்றன. வருடங்கள் ஐந்தாயின. லம்போதர முதலியார் எப்பொழுதும்போல்தானிருக்கிறார். வீடும் முன்னிருந்ததுபோலவே தானிக்கிறது. தணிகை வேலனும் முன்னிலும் பன்மடங்கு அழகிய காளையாய்க் காணப்படுகிறான். தேவானையம்மாள் கூனிக் குறுகிக் கோல்பிடித்து நடந்துகொண்டிருக்கிறாள். புனிதம் அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல் அதே கோலத்தில்தான் இருக்கிறாள்.

கற்பகம் வயது பத்தேயானாலும் வெள்ளரிப்பிஞ்சுபோல் வளர்ந்திருக்கிருள். நடுக்கூடத்தில் ஒரு கருங்காலிக் கட்டிலிற் படுத்திருக்கிறாள் சிவகாமி. தொட்டிலில் ஒரு சிறு குழந்தை கைவிரல்களே வாயில் வைத்துச் சீப்பியவண்ணம் கைகால்களே உதைத்த வண்ணம் படுத்திருந்தது.

அதைபடுத்து மற்றொரு தொட்டிலில் அதே சாயலாய் இன்னொரு குழந்தை அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. கட்டிலிற் படுத்திருப்பவள் சிவகாமி தானென்பதை முகச் சாயலினாலும் குரலினாலும் தான் கண்டுகொள்ள முடியுமேயன்றி, சாதாரணமாய்ப் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளமுடியாது. அவள் அவ்வளவு உருமாறி இளேத்து மெலிந்து கிடந்தாள்.

அடுத்து ஒரு சிறு மேஜையில் மருந்துகளும் மற்றும் வேண்டிய பொருள்களும் வைக்கப்பட்டிருந்தன. எதிரிலிருந்த மற்றொரு நாற்காலியில் விசனமே உருவெடுத்து வந்தாற்போல் உட்கார்ந்திருந்தாள் புனிதம்.

உடல் மட்டும் உட்கார்ந்திருந்தது. ஆனால் எண்ணங்கள் எங்கேயோ ஓரிடத்தில் ஈடுபட்டிருந்தது.

"ஆண்டவனே, ஒன்றுக்கும் உதவாத நான் இறந்தாலும் குற்றமில்லே. இந்தப் பச்சைக் குழந்தைகளுக்காக அவளுக்கு உயிர்ப் பிச்சை போடக்கூடாதா? அந்தக் காலத்தில் பாபர் சக்ரவர்த்தி மகனுக்காக உயிரைக் கொடுத்தார் என்று சொல்லுவார்கள். நான் இந்த க்ஷணத்திலேயே என் உயிரை வேண்டுமானாலும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். நான் இறந்து போனால் ஒருவருக்கும் ஒன்றும் கஷ்டமில்லே. அவள் இறந்தால் குடும்பம் தத்தளித்துப் போய்விடும். நான்கு குழந்தைகளேயும் வைத்துக்கொண்டு என்ன செய்வான் பாவம்! அப்பனுக்குப் பிள்ளே தப்பாது பிறந்தான் என்று இவனுக்கும்

இந்த வயதிலேயே அப்படி நேர்ந்து விடுமோ? மாமாவுக்கு ஒருவிதம், அம்மாவுக்கு ஒரு விதம், என் சங்கதி வேறொரு விதம். இவன் ஒருவனுவது நன்ருய் பச்சென்றிருக்கலாகாதா?...... இந்த மூன்று வருஷமாய் இந்தப்பேதை சிவகாமிக்காக என்ன பாடுபட்டேன்? இந்தக் குழந்தைகளுக்காக என்ன பாடுபட்டேன்? என் கண்மணிகள் என்னைப்போலவே தாயற்றுத் தவித்துவிடுமோ? ஆனமட்டும் சொன்னேனே கேட்டாளா? உலகத்தில் யாருக்குத்தான் தாயார் இறந்துபோகவில்லை? கேட்காமல் அழுதும் தூக்கம் விழித்து மன்ருே உடம்பைக் குட்டிச் சுவராய் அடித்துக்கொண்டாள்?" என்று தனக்குள்ளே எண்ணமிட்டவளாய் உட்கார்ந்திருக்கையில், "அக்கா பால்!" என்று கேட்டு விட்டு வரண்ட தன் உதடுகளை நாவினுல் தடவிக்கொண்டாள் சிவகாமி.

புனிதம் பாலை எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாய் அவளுக்குக் கொடுத்துவிட்டு, கைகளைச் சுத்தம் செய்துகொண்டு சிறுகுழந்தையைக் கையிலெடுத்தவளாய் சற்றுத் தொலைவிலுள்ள ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தாள்.

சிவகாமி மெதுவாய் ஒருக்கணித்துக் குழந்தையைக் கவனிக்கலானுள். அச்சிறுகுழந்தை நெடுநேரம் அவளை ஊன்றிப் பார்த்துவிட்டுத் தன் ஊமை வார்த்தைகளால் 'ஊம்' என்றது. சிவகாமி தன் மனதுள் பொங்கியெழும் ஆனந்தத்தை வெளியே காண்பித்துக்கொள்ள வெட்கினுள். வரண்டு உலர்ந்து கிடந்த அவள் இதழ்களில் இளநகை யரும்பிற்று.

குழந்தை அவளை உற்று நோக்குவதையும் அவள் நகைப்பையும் கண்ட புனிதத்திற்கு நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ளத் தொடங்கிற்று. இன்னதென்று சொல்லமுடியாத ஒருவித வேதனையினுல் அவள் தவிக்கலானுள். கண்களினின்றும் கண்ணீர் மாலை மாலையாய்ப் பெருகி அவள் சேலையை நனைத்தது. அதை மறைக்கும் பொருட்டு எதையோ பார்ப்பவள்போல் மறுபுறம் திரும்பினுள். சிவகாமியின் கண்கள் அவள் கண்களைச் சந்தித்தன. (தொடரும்)

## அறிக்கை

கீழ்கண்ட இடங்களில் 'பாரத பணி'யை விற்க ஏஜண்டுகள் தேவை. 25 பிரதிகளுக்குக் குறைந்து ஏஜன்ஸி கொடுக்க முடியாது. டிபாஸிட் கட்டக் கூடியவர்களே விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| திருவாரூர் | புதுக்கோட்டை |
| நாகப்பட்டினம் | திருத்துரைப்பூண்டி |
| விழுப்புரம் | நன்னிலம் |
| திண்டிவனம் | பொள்ளாச்சி |
| பட்டுக்கோட்டை | கரூர் |
| மானுமதுரை | ஈரோடு |

மானேஜர்.

## விசேஷ அறிக்கை

முனிசிபல் எல்லைக்குட்படாத கிராமப் பிரதேசங்களில் ஐந்து சந்தாதாரர்கள் சேர்த்துக்கொடுக்கும் நண்பருக்கு ஒரு வருஷத்திற்கு 'பாரத மணி' இனுமாக அனுப்பப்படும்.

மானேஜர்.




# சகோதர வாஞ்சை

(ஸ்ரீ. கே. வெங்கடராமன், பி. ஏ.)

வெகு காலத்திற்கு முன்பு, குமணன்என்று ஓர் அரசனிருந்தான். அவன் பல வித்வான்களையும், கவிகளையும் ஆதரித்து வந்தான். அதனால் அவனுடைய சபையில், எப்பொழுதும், கவிகளும் புலவர்களும் மிகுதியாக இருந்து வந்தார்கள். அவர்களுக்கெல்லாம், குமணன் தாராளமாகப் பொருள் வழங்கி வந்தான்.

குமணனுக்கு ஓர் தம்பி இருந்தான். அவனோ தன் சகோதரனைப்போல், அவ்வளவு தாராளமான மனப்பான்மை இல்லாதவன்.

குமணன் மிகவும் தாராளமாகப் பொருள் வழங்கி வந்ததால், பொக்கிஷத்தில் பொருள் குறைய ஆரம்பித்தது. இதைத் தம்பியால் பொறுக்க முடியவில்லை. “இப்படியே நாம் விட்டுவிட்டால், இன்னும் கொஞ்ச நாட்களில் பொக்கிஷமே காலியாகிவிடும். ஆகையால் நாம் அதை எப்படியாவது தடுக்கவேண்டும். அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. குமணனைக் கொன்றுவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்” என்று ஓர் முடிவிற்குவந்து, தன் அண்ணனைக் கொல்லுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்ய ஆரம்பித்தான்.

இது எப்படியோ குமணனுக்குத் தெரிந்து விட்டது. உடனே குமணன், ஒருவருக்கும் தெரியாமல் ஓர் காட்டிற்கு ஓடி விட்டான். குமணன் ஓடிவிட்ட பிறகும், அவன் தம்பி மன நிம்மதி அடையவில்லை.

ஆகையால் அவன், “எவன் குமணனின் தலையைக்கொண்டு வருகிறானோ, அவனுக்கு ஆயிரம் பொன் நாணயங்கள் பரிசாகக் கொடுக்கப்படும்” என்று பறைசாற்றி வைத்தான்.

குமணன் காட்டிற்கு ஓடிவிட்ட பிற்பாடும், அவனைப் பல புலவர்களும் கவிகளும் தேடிச்சென்று, வணங்கி வரலானார்கள். தன்னிடம் எஞ்சி இருந்த பொருள்களையெல்லாம் குமணன் வழங்கினான். நாளடைவில் அவன் கையில் இருந்த எல்லாப் பொருள்களும் செலவாகி விட்டன. மேலும் அவன் தன் தம்பி, தன் தலைக்காக ஏற்படுத்தி இருக்கும் பரிசையும் அறிந்திருந்தான்.

இப்படி இருக்கும்பொழுது ஒரு நாள், பெருந்தலைச் சாத்தனார் என்னும் ஓர் மகாகவி, குமணனை அடைந்து அவன் பேரில் ஓர் கவி பாடினார். அந்தக் கவி பல ஆயிரம் பொன் பொறும். ஆனால் குமணனிடமோ ஓர் செப்புக்காசும்இல்லை. ஆகையால், அவன் அப்புலவரைப் பார்த்து, “புலவரே, நான் உமக்கு ஒன்றும் கொடுக்க இயலாதவனாயிருக்கிறேன். ஆனால் ஒன்று செய்

கிறேன். என்னுடைய தம்பி என் தலையைக் கொண்டு வருவோர்க்கு ஆயிரம் பொன் தருவதாகப் பறை சாற்றி வைத்திருக்கிறான். ஆகையால் நான் முழுமனதோடு கொடுக்கும் என் தலையை எடுத்துச் சென்று, அப்பரிசை பெற்றுச்செல்லும். அதுதான் நான் செய்யக்கூடியது" என்று சொல்லி, தன் தலையை வெட்ட முயன்றான்.

உடனே அப்புலவர், அதைத் தடுத்து, "அரசே! எனக்கு உம்மைக் கண்டதே, விலையில்லா ஓர் பொருளை அடைந்ததுபோல் இருக்கிறது. ஆகையால் நான் சென்று வருகிறேன்'' என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு, நேராக ஓர் வாழைத் தோட்டத்திற்குச் சென்றார்.

அவ்வாழைத் தோட்டக்காரனைக்கொண்டு, வாழை மரத்தினால், குமணனுடைய தலையைப்போலவே ஓர் உருவம் செய்வித்தார்: வெட்டிய இடத்திலிருந்து ரத்தம் வழிவது போன்றும் செய்வித்தார். உடனே அதை எடுத்துக்கொண்டு குமணன் தம்பியிடம் சென்றார்.

"தங்களுடைய உத்திரவின்படி குமணனுடைய தலையைக்கொண்டு வந்திருக்கிறேன். அதற்குண்டான பரிசைக் கொடும்'' என்று கேட்டார்.

தம்பியும், உண்மையாக அது குமணனுடைய தலைதான் என்று நம்பிவிட்டான். உடனே சகோதர வாஞ்சை தொண்டையில் வந்து அடைத்துக் கொண்டது. துக்கம் தாளமுடியவில்லை. உடனே வாய் விட்டுக் கதற ஆரம்பித்தான்.

"ஐயோ! என்ன கொடுமை! நான் ஒரு கொலைபாதகனாகி விட்டேனே! என் அண்ணனை உயிருடன் கொண்டு வருபவருக்குப் பத்தாயிரம் பொன் பரிசு அளிக்கிறேன்'' என்று சொல்லி, மேலும் கதறினான்.

"இது உண்மையா?'' என்றார் பெருந்தலைச் சாத்தனார்.

"இது சத்தியம்! மகா அறிவாளியாகிய என் அண்ணன் இல்லாமல் இராஜ்ஜியம் சோபை அற்றிருக்கிறது. அவனே உண்மை அரசன்'' என்றான்.

" அப்படியானால் என்னுடன் வாரும். உம் சகோதரனை உயிருடன் காண்பீர்'' என்று சொல்லி, பெருந்தலைச் சாத்தனார் அவனை குமணனிடம் அழைத்துச்சென்றார். குமணனைக் கண்டதும் தம்பி அவன் கால்களில் விழுந்து, "அண்ணா, மன்னிக்க வேண்டும். நான் அறியாமையால் செய்த பிழைகளை மறக்க வேண்டும். உடனே நீங்கள் ராஜ்யத்திற்கு வர வேண்டும்'' என்றுசொல்லி வணங்கினான்.

குமணனும் மிகுந்த சந்தோஷத்துடன், தன் தம்பியுடனும் பெருந்தலைச் சாத்தனாருடனும் நாட்டிற்குத் திரும்பி, அரசை ஏற்றுக்கொண்டு, வெகுகாலம் சீரும் சிறப்பும் பொங்க ஆண்டு வந்தான்.

# மிருக சிகிச்சை

(ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி)

II

நமது ரயத்துக்களுக்குக் கால் நடைகளின் உதவியே முக்கியமான பொருளாதாரமாயிருந்தும் அவர்கள் தங்கள் மாடு கன்றுகளைப் பற்றிச் சிரத்தை எடுத்துக் கொள்ளாமலும், உயிருள்ள வரையில் அவைகள் தங்களுக்கு உழைக்கவேண்டுமென்ற நோக்கத்துடனுமிருப்பதற்கு, முன் இதழில் சொன்னமாதிரி, அவர்களின் அஞ்ஞானமே காரணமாகும். நாளடைவில், அனுபவத்தின் பேரிலும், தாங்கள் கண்டதையும் கேட்டதையும் பயன் படுத்திக்கொள்ளல்வேண்டும். நமது சர்க்கார் இதற்கு ஒத்தாசைசெய்யவேண்டும். கண்காக்ஷிக்காகவும் ஜனங்களுக்குப் போதிக்கவும் ஏற்பட்டுள்ள மோட்டார் வண்டிகளின் மூலம் பசு சம்ரக்ஷணையைப் பற்றி போதிக்கவேண்டும். படங்கள் மூலம் கால் நடைகளின் தொத்து வியாதிகள், அவைகளைத் தடுக்கவேண்டிய நூதன முறைகள், அவைகளுக்குச் சாதாரணமாக ஏற்படக்கூடிய சில்லரை நோக்காடுகள், அவைகட்கான சிகிச்சை முறைகள், முதலான விபரங்களைக் காட்டவேண்டும். கண்காக்ஷிகள் சமயம் நேரிட்டபொழுது ஏற்பாடுசெய்து, கால் நடை இலாகா ரயத்துக்களின் க்ஷேமத்திற்காகச் செய்து வரும் முயற்சிகள், பிறதேசங்களில் கால் நடைப் பாதுகாப்பு, அபிவிருத்தி, இதற்கான நூதன ஏற்பாடுகள், இன்னும் இது போன்ற விஷயங்களை அக்கண்காக்ஷிகளில் காண்பித்து அவர்கள் மனதில் படும்படி சொற்பொழிவுகள் நடத்துவது அவசியமாகும்.

கால்நடை இலாகா உத்தியோகஸ்தர்கள் சற்று முயற்சி எடுத்துக்கொண்டு ரயத்துக்களை ஆதரித்து, அவர்கள் பேதமைத்தனத்தை உணர்ந்து கூடியவரை அவர்களுக்கு உதவிபுரியவேண்டியது, எல்லாவற்றிலும் முக்கியம். கால்நடை வைத்தியசாலை டாக்டர்களும் சரி, சுற்றுப் பிரயாணம் செய்யும் டாக்டர்களும் சரி, சமயம் வாய்த்தபோது ரயத்துகளுக்கு அவர்கள் தெரிந்து கொண்டு நடந்துக்கொள்ளக் கூடிய முறையில் போதிக்கவேண்டும். ரயத்துகளின் தற்கால கஷ்ட நிலையை உணர்ந்து பணத்தின் மேல் நோக்கங் கொள்ளாமல் உதவிபுரிதல் முக்கியம். இப்படிச் செய்யத் தலைப்பட்டால் கால்நடை இலாகா டாக்டர்களைவிட மிகுந்த கௌரவத்தோடு கொண்டாடப்படும் உத்தியோகஸ்தர்களே இருக்கமாட்டார்கள்.

பகுத்தறிவு, பேசும் சக்தி, இவை இரண்டும் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் கால் நடைகளின் தேகஸ்திதி நம்முடைய தேகஸ்திதியையே சற்றேறக் குறைய ஒத்திருக்கிறது. சில நுட்பமான விஷயங்களில் அவைகள், நம்மைவிட மேலான குணமுள்ளவை என்றே சொல்லலாம். மனித வைத்தியத்திற்கும் மிருக வைத்தியத்திற்கும் சில விஷயங்களில் ஒற்றுமை உண்டு. சிலவிஷயங்களில் வித்தியாசம் உண்டு. மிருகங்களிடமிருந்து மனிதர்களுக்குத் தொத்திக்கொள்ளக்கூடிய சிற்சில வியாதிகளும் உள. சிற்சில மருந்துகள் சம்பந்தப்பட்டவரை, மனித தேகத்துக்கும் மிருக தேகத்துக்குமுள்ள இயற்கை அமைப்பினாலும், ஆகாராதிகளின் வித்தியாசத்தினாலும் முக்கியமான சில மாறுபாடுகள் நாம் அறியவேண்டியது அவசியம். இந்த சந்தர்ப்பத்தில் நாம் அறிந்து கொள்ளவேண்டிய ஒரு விஷயம் முக்கியமானது. தேகத்தில் உள்ள இயந்திரங்கள் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்து நன்றாய்ப்பெருகி இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அவைகளில் மருந்து துரிதமாயும், சுலபமாயும் வேலைசெய்யும்; அவ்வளவுக்கவ்வளவு சுலபமாய் நோய்க்கும் உள்ளாகும். ஆகையால் மருந்துகளும் அவைகளின் உபயோகங்களும் தெரிந்த மாத்திரத்தில் ஒருவன் வைத்தியம் செய்ய முற்படுவது தப்பு. தேகத்தின் இயற்கை அமைப்பு, தேகத்திலுள்ள இயந்திரங்களின் வேலை, தேகத்தன்மை, இவைகளை அறிந்து வைத்தியம் செய்வதே முறையாகும்.

அடுத்த இதழில் மேல் சொன்ன விஷயங்களைக் கவனிப்போம்.

கடிதம்

# அஸ்திவாரம்

கிராமப் புனருத்தாரணமென்ற மேன்மையான நோக்கங்கொண்டு தாங்கள் வெளியிடும் "பாரதமணி"யில் 12-2-39-ல் ஸ்ரீ. அரையபுரம் வெங்கடராமய்யரவர்கள் எழுதியிருக்கும் விஷயங்களில் கிராம ஜனங்கள் அடிக்கடி கூடவேண்டிய அவசியம் இல்லை யென்றும், தலைவர்களிடம் அவர்களுக்கு இருக்கவேண்டிய மரியாதை குன்றக்கூடிய சந்தர்ப்பம் நேரிடும் என்றும், எழுதியிருப்பது என் புத்திக்கு ஒப்புக்கொள்ளக் கூடியதாய்த் தோன்றவில்லை.

ஏனெனில் தலைவர்கள் உண்மையில் தலைவர்களல்ல. அவர்கள் சமூகத் தொண்டர்கள். பாமர ஜனங்களைவிட சமூகத் தொண்டர்கள் ஒருவரை யொருவர் தூரிக்கொள்ளாமல் கக்ஷி பேதங்களைக் கண்ணியமான வழியில் பிரித்துப் பேச வேண்டிய கடமையை அதிகமாய்க் கைப்பற்ற வேண்டியவர்கள். இக்கடமையிலுள்ள வரம்பைத் தப்பிக்க முயற்சிப்பவரே, மேற்சொன்னபடி பொது ஜனங்களின் கடமைகளைத் தாங்களே நிறைவேற்றிவிடுவதாகவும் பொது ஜனங்கள் கூடி யோசிக்கவேண்டிய அவசியமில்லை யென்றும் கக்ஷியாடுபவரென்பது என் நம்பிக்கை. இக் கடமையை நன்கறிந்து அதற்கடங்கி நடந்த தொண்டர்களால் நேஷனல் காங்கிரஸ் மேன்மை பெற்றது. இதை முற்றும் அறியாதவர்களோடோ அல்லது மறந்தவர்களோடோ சேர்ந்த தோஷத்தினுல்தான், தற்சமயம் காங்கிரஸில் கக்ஷிப் பிரதிகக்ஷிகளும் சச்சரவுகளும், அதிகார அதிக்கிரமிப்பும், இவைகளால் காங்கிரஸின் மேன்மை குன்றவும் நேர்ந்திருக்கிறது. இவைகளையும் இவர்களையும் நீக்கி காங்கிரஸை முன்னிருந்த மேன்மையான அந்தஸ்துக்குக் கொண்டு வரவேண்டும் என்றுதான் மகாத்மா காந்தி முறையிடுவது.

சமூகத் தொண்டர்கள் அடிக்கடி பொது ஜனக் கூட்ட மத்தியில் நிற்க நேராத போது அவர்கள் இக் கடமையை மறப்பதும், தங்கள் மனம்போல் காரியங்களைச் செய்வதும் திண்ணம். மகாத்மா காந்தி கிராமப் புனருத்தாரணம் செய்ய ஆரம்பித்த நோக்கமும் இதுவே.

கிராமப் புனருத்தாரணமாவது என்ன? அதை ஆராய்வோம்.

கிராமப்புனருத்தாரணம் என்று சொல்வதிலிருந்தே கிராமோத்தாரணம் என்பது இதற்குமுன் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பதை அறிகிறோம். எப்போது? யாரால்? எப்படி? என்னும் கேள்விகள் சகஜமாக உதிக்கின்றன. இந்தக் கேள்விகளுக்குச் சரியான பதில் தெரியவேண்டும். பிறகு இக் கிராமோத்தாரண மூலம் எவ்விதமான சமூகத்தை ஸ்தாபித்தனர், அப்படி ஸ்தாபிக்கப்பட்ட சமூக மென்பது எவ்வகையானது, அவ்வகைக்குக் காரணமென்ன, அச்சமூகத்தின் ஒவ்வோர் அங்கத்தினரின் கடமைகளென்ன என்பதைப் பற்றிப் பின்னுல் ஆராயலாம்.

நிற்க, இக் கேள்விகளுக்குச் சரியான பதிலறிந்து மேற்சொல்லப்பட்ட நம் பண்டைய சமூகத்தின் தற்கால நிலைமையை ஆராய்ச்சி செய்து பார்த்தால் நம் சாஸ்திரங்கள் புராணங்கள் இவைகளே உண்மையான தேச சரித்திரமென்றும், தற்போது நம் குழந்தைகளுக்குப் பரீக்ஷை நடத்தும் தேச சரித்திரப் புத்தகங்கள் நம் தேச உண்மைச் சரித்திரமேயல்ல வென்றும் விளங்கும். இப்படியாக, நாம் புனருத்தாரணம் என்று புகுவதின் நோக்கம் என்ன? தற்போது நம் நாட்டில் அயலாரின் அரசியலால் ஏற்பட்ட நிபந்தனைகளையும் அவைகளாலுண்டான பழக்கவழக்கங்களையும், கஷ்ட நஷ்டங்களையும் அறிந்து, நம் பண்டைய சமூகச் சீர்களோடு ஒத்திட்டு, காலத்துக்கேற்க இவைகளை ஒழுங்கு சேர்த்து, பொது ஜனங்களின் மத்தியில் இவைகளின் குணகுணங்களை வாதம் செய்து, எல்லோருடைய சம்மதியின் பேரில் தற்கால நிலை

மைக்கேற்க ஒரு புது சமூகத்தை ஸ்தாபித்து, அதன் மூலம், நம் நாட்டாரே ஒருவரை யொருவர் தூறுவதை அறவே ஒழித்து,ஜனங்களால் யோக்யதை யறிந்து தெரிந்தெடுக்கப்பட்ட தொண்டர்களால் அரசாங்கம் நடத்தச் செய்வதுமே, கிராமப்புனருத்தாரணத்தின் நோக்கமும் கருத்தும் ஆகும்.

இப்புனருத்தாரணம் தற்போதுள்ள அரசாங்கத்தால் ஆகாது. சமூகத் தொண்டர்களால் மட்டும் செய்யப்படக்கூடியது. அதனால்தான் காந்திஜி இதை ஏற்றுக்கொண்டது. தொண்டர்கள் மேற்சொன்ன விஷயங்களைத் தாங்களறிந்து, பிறகு பொது ஜனங்களிடம் சென்று போதிக்கவேண்டும். இவைகளைப் பொது ஜனங்களறிந்த பிறகுதான் புனருத்தாரணம் என்பது சாத்தியம். இல்லாவிடில் அசாத்தியம். ஏன்?

ஏனெனில், தொண்டு செய்ய முற்படும் தொண்டர்கள், கிராமத்தாரிடம் சென்று என்ன சொல்வார்கள்? எல்லோரும் உடனே கிருப்பு வைத்துக்கொண்டு பூணூலைக் களைந்துவிட்டுச் சமநிலை யடையுங்கள் என்று சொல்வார்களா? சமபந்தி போஜனங்களை உடனே ஸ்தாபியுங்கள் என்பார்களா? அல்லது பிரும்ம க்ஷத்ரிய வைசிய சூத்திரரென்று நான்கு வருணத்தாரை ஊர்ஜிதப்படுத்துவார்களா? அல்லது அந்தக் காலம் மலையேறிவிட்டது, தற்காலம் எல்லாரும் சமம், என்பார்களா?

ஆகையால், வீடுகட்ட அஸ்திவாரமில்லாமலெப்படி முடியாதோ அதேபோல் கிராமப் புனருத்தாரணத்துக்கும் மேல் சொல்லப்பட்ட விஷயங்கள் இன்றியமையாத அஸ்திவாரங்கள் ஆகும். "பாரதமணி" இவைகளைப் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுமானல் உடனே ஜனங்களில் சிலருக்காவது ஊக்க மேற்பட்டு தேச பக்தர்களான உண்மைத் தொண்டர்கள் சிலர் இவ்வஸ்திவாரத்தைப் போட முந்துவார்க ளென்பது திண்ணம்.

பம்பாய்,<br>13-2-39.

தங்கள்,<br>ரங்கநாதன்.

---

சுக சௌக்கியங்களுக்கு

பஞ்சேந்திரியங்கள்!

அவைகட்கு உதவி

"ஆறுவது இந்திரியம், பணம்!"

பணம் பெருகுவது

பாங்கிலும் இன்ஷ்யூரன்ஸிலும்தான்

# வலை வீச்சு



## கூட்டுறவு இயக்கம்

தனிப்பட்டவர்களிடத்தில் மட்டும் உத்சாகம் இருந்தால் போதாது. ஒன்று சேர்ந்து வேலை செய்யும் உத்சாகம் தான் கூட்டு வேலைகளுக்கு முக்கியமாகும். கூட்டு உணர்ச்சி இருந்தால்தான் வெற்றி அடைய முடியும். எல்லோரும் சேர்ந்து ஒருமித்து வேலை செய்யும் ஆற்றல் இல்லாவிட்டால் எவ்வளவு பெரிய கொள்கைகளைப் போதித்துத்தான் என்ன பிரயோஜனம்? நமது பொறுப்பாட்சி ஸ்தாபனங்கள் வளர வேண்டுமானால் வோட்டர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தனது கடைமையை உணராதவர்களை அவர்கள் அனுமதிக்கக்கூடாது. மேலும், உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள் தங்கள் பொறுப்புக்களை உத்சாகத்துடனும் பயபக்தியுடனும் நிறைவேற்றி வைப்பதுடன் அல்லாமல், தன்னைப்பற்றி பிறர் சந்தேகிப்பதற்கே இடமில்லாமல் நடந்து கொள்ளவேண்டும். கூட்டுறவு பாங்கியை நிர்வகிப்பவர்கள் இதை எப்போதும் ஞாபகம் வைத்துக் கொள்வார்களாக.

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் இருக்கிறது. அது முன்னுக்கு வர வேண்டுமென்றால் மகா ஜனங்கள் படிப்பும் பயிற்சியும் அடைய வேண்டும். அந்த ஸ்தாபனத்தினால் எவ்வளவு நன்மை உண்டாகு மென்பதை அவர்கள் அறிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். படித்த வாலிபர்களும் யுவதிகளும் சமூக சேவை செய்வதற்கு இந்த வழியில் நிரம்ப இட மிருக்கிறது.

விவசாயிக்கு மற்றொரு முக்கியமான பிரச்னை என்ன வென்றால் தன் சாமானை விற்பனை செய்யும் விஷயம்தான். விற்பனை ஸொஸைடிகள் நன்றாக வேலைசெய்தால் தரகர்கள் உபத்திரவத்தி லிருந்து விவசாயியைக் காப்பாற்றலாம்.

பொருளாதார விஷயத்தைத் தவிர மற்ற சில விஷயங்களில் கூட இந்த கூட்டுறவு மிகுந்த பலனைக் கொடுக்க முடியும். ஒரு மனிதனின் நடத்தையையும் தன்மையையும் தூய்மையாக்கிக் கொள்ள கூட்டுறவு ஒத்தாசை செய்கிறது. ஏனென்றால் மனிதனின் தன்மையைப் பார்த்துத்தானே கடன் கொடுக்கிறார்கள்? கூட்டுறவு ஸொஸைடியின் மெம்பர்கள் தங்கள் கௌரவத்தில் கண்ணுயிருக்கவேண்டும். பணத்தைத் திருப்பி வாங்க கோர்ட்டுக்குப் போகும்படியான பிரமேயத்தை ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது. கூட்டுறவு ஸொஸைடியை சுயேச்சையான குடியரசுக்கு ஒப்பிடலாம். மெம்பர்களுக்கு சமத்துவம் உண்டு. அதை நிர்வகிக்க எல்லோருக்கும் சம உரிமை உண்டு. சுய அரசாட்சியை அடைய இதுதான் சரியான பயிற்சிக்கூட்டம் என்றுகூடச் சொல்லலாம். ஆனால் அந்த லட்சியம் வெகு தூரம் இருக்கிறதென்பது வருஷா வருஷம் மறையும் பல ஸொஸைடிகளையும், போடப்படும் தாவாக்களையும், கடன் திரும்ப வராமல் உண்டாகும் நஷ்டங்களையும் பார்த்தால் தெரியவருகிறது. நமது ஜனங்கள் வியாஜ்யத்திலும் கொண்டாட்டங்களிலும் அபரிமிதமான பணத்தைச் செலவழிப்பதால் வறுமை உண்டாகிறதென்றும் அதற்கு கூட்டுறவு சிறந்த மருந்தாக இருக்குமென்றும் நான் நினைக்கிறேன். கூட்டுறவு பல விதங்களில் கிராமவாசிகளுக்கு உதவிசெய்ய முடியும். கிராம நிர்மாண ஸொஸைட்டிகள், வீட்டு உதவி ஸொஸைட்டிகள், தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஸொஸைடிகள்—இவைகளை ஏற்படுத்தி எவ்வளவோ சீர்திருத்தம் செய்யலாம். "பண விஷயங்களுடன் ஆத்மார்த்த விஷயங்களையும் சேர்த்திருப்பதுதான் கூட்டுறவுக்கும், விவசாயிகளின் நலனுக்காக உண்டான மற்ற ஸ்தாபனங்களுக்கும் இருக்கும் வித்தியாசம்" என்று சொல்லியிருப்பது முற்றிலும் வாஸ்தவமேயாகும்.

—ஸர் மிர்ஸா இஸ்மேயில்.

## நேருவின் லக்ஷியம்

மற்ற காரியக் கமிட்டி மெம்பர்களுடன் ஸ்ரீ. நேரு ராஜினாமாச் செய்துவிட்டார். அவ

ருடைய மர்மத்தை அறியாத ஒருவர் 'ஒரே இடத்திலிருந்து ஒரே சமயத்தில் தனியாக கடிதம் எழுதுவானேன்?' என்று கேட்கலாம். இந்தக் கேள்விக்கு நிச்சயத்தோடு பதில் கொடுக்க முடியாது. இந்தக் கடிதத்தால், தான் இடது சிறகார்களுடன் மனவேற்றுமைப் பட்டபோதிலும் தன்னை வலது சிறகில் ஒருவனாகக் கருதிக்கொள்ளக்கூடாது என்பதற்காக இருக்கலாம். அப்படியானால் காங்கிரஸில் அவர் நிற்க விரும்பும் அந்த 'திரிசங்கு ஸ்தானம்' எங்கிருக்கிறது? அது எங்கே இருக்கிறதென்று ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாது, ஸ்ரீ நேருவே அதைச் சொன்னாலொழிய. காரியக் கமிட்டியிலிருந்து வெளியே வருவதென்று ஸ்ரீ நேரு செய்த தீர்மானத்தை ஜெயபிரகாச நாராயணர் இடது சிறகிற்கு ஒரு பெரிய இடி என்றுகூறுகிறார். வாஸ்தவம்தான்; ஸ்ரீ நேரு 1926-ம் வருஷத்தில் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்குவந்ததும் ஸோஷலிஸத்தை காங்கிரஸில் ஜ்வாலைவிட்டு எரியும்படி செய்தார். சமீப காலத்தில் அவர்செய்த பிரசங்கங்களை வாசித்துப்பார்த்தால் ஸோஷலிஸத்தின் தீவிரம் குடிகொண்டிருக்கும். அவர் சுய சரிதையே ஸோஷலிஸத்தின் கட்சியை வலியுறுத்தும் புத்தகம்தானே? காங்கிரஸ் ஸோஷலிஸ்ட் கட்சியில் அவர் சேராவிட்டால்கூட அக்கட்சியின் தந்தையே அவர்தான் என்றுகூடச் சொல்லலாம். அப்படியிருக்கும்போது இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தங்களை நட்டாற்றில் விட்டுச் சென்றதைப் பார்த்து ஸோஷலிஸ்டுகள் வருந்துகிறார்கள்.

சென்ற பத்து வருஷங்களாக ஸ்ரீ. நேருவின் ராஜீய வாழ்க்கையைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு அவர் அடிக்கடி காந்தீயத்துடன் சமரஸம் செய்துகொண்ட விஷயம் தெரியவரும். காந்திஜி தூர இருக்கும்போது அவரது ஸோஷலிஸம் அதி தீவிரமாக ஆகிவிடும் ஆனால் குரு (காந்திஜி) யின் வாத்ஸல்யமான பார்வையாலும் அன்பார்ந்த வார்த்தைகளாலும் நேருவின் தீவிரம் குளிர்ந்து சமனம் ஆகிவிடுகிறது. 1928-ம் வருஷம் கல்கத்தாவில் ஸ்ரீ நேரு இருதலைக்கொள்ளி எரும்பாகத் தவித்ததை நண்பர்கள் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். நேரு சுயேச்சை லீக்கை ஸ்தாபித்ததும், இந்தியாவின் லக்ஷ்யமாக பூர்ண சுயேச்சையை ஏகமனதாக அது தீர்மானம் செய்தது. ஆனால் நேரு அறிக்கை குடியேற்ற நாட்டந்தஸ்தை ஒப்புக்கொண்டது. அது காந்திஜி, மோதிலால் நேரு இவர்களின் ஆதரவைப்பெற்றது. ஆனால் பூர்ண சுயேச்சைத் தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டபோது ஜவஹர்லால் இரண்டு பக்கத்திலும் சேர்ந்து கொள்ள முடியாமல் தவித்தார். ஒரு பக்கம் தனது கொள்கை; மற்றொருபுறம் காந்திஜியிடம், தந்தையிடம் உள்ள அன்பு—இரண்டும் அவரைப்பிடித்து இழுத்தன. அதிர்ஷ்ட வசமாக நேருவுக்கு அசௌகரியத்தை கடவுள் உண்டாக்கவே அவர் மெதுவாகப் பின்னுக்குப்போய் மானத்தைக் காப்பாற்றிக் கொண்டார். பிறகு, இந்தியா சட்டத்தை அவர் எதிர்த்ததும் அதற்குப்பிறகு மெதுவாக மாகாண சுய ஆட்சியை ஏற்றுக் கொள்ள இசைந்ததும் சமீபகாலத்திய சம்பவங்களாதலால் விவரிக்கவேண்டியதில்லை.

ஆனால் அவர் ஹிருதயத்திற்கும் கொள்கைக்கும் நடக்கும்போர் எவ்வளவு நாளைக்குத்தான் நீடிக்கும்? குழப்பமுள்ள மனிதன் பல ஹீனமுள்ளவன் என்று மனோ சாஸ்திரம் கூறுகிறது. இப்போது செய்வதைப் போல் நேரு தன் கொள்கைகளை விட்டுக் கொடுத்தால்,இந்தியாவில் ஸோஷலிஸம் வருவது வீணாகத் தடைப்படும் என்று பல நண்பர்கள் பயப்படுகிறார்கள். நேருவின் உயர்ந்த சக்திகள் கடைசியில் வீணாகப்போகுமா? நேரு ஓர் சுயேச்சையான மனிதர். எந்த விதமான கொடுமைக்கும் அவர் உள்ளாவதைச் சகிக்கமாட்டார். ஆனால் அவரே ஒரு கொடிய கொடுமையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை அறியவில்லையா —அன்பு என்கிற கொடுமையில்?

—இந்தியன் அபேர்ஸ்.

## நிச்சயமான வேலை

கைகால் சுவாதீனமுள்ளவர்களுக்கு வேலை கொடுப்பதோ அல்லது அவர்களைக் காப்பாற்றுவதோ செய்யாமலும் உடம்பு காயத்தினாலோ அல்லது அசௌகர்யத்தினாலோ கஷ்டப்படும் ஜனங்களைக் கவனிக்காமலும் இருக்கும் ஒரு தேசத்து தொழிலாளி சர்க்கார் அநாகரீகமானது என்றே கூறவேண்டும். ஒரு நல்ல தொழிலாளி சர்க்கார், ஜனங்களுக்கு ஒருவிதமான கவலையையும் கொடுக்கக் கூடாது. மனிதர்களும் ஸ்திரீகளும் வறுமையால் வருந்திக்கொண்டிருந்தால், அத்தேசத்து தொழிலாளி சர்க்கார் அபேதவாதமாக ஆகாது.

அபேதவாத முறையில் வேலையில்லாத் திண்டாட்டமே இருக்காது. முதலாளி முறையில், ஒரு எஜமானன் அவன் வேலையாட்களின் கூலியை அதிகப்படுத்தவும், அவர்கள் வேலை செய்யும் நேரத்தைக் குறைக்கவும், செய்வது சிரமம். வேலைக்காரர்கள் கூலியை அதிகரித்தால் அவர்களுக்கு எஜமானனிடத்தில் நம்பிக்கையும், தங்கள் வேலையில் ஒரு பற்றும் உண்டாகும் என்பது ஒவ்வொரு

முதலாளிக்கும் தெரிந்திருக்கலாம். ஒவ்வொரு முதலாளிக்கும், அவன் தயாரித்த சரக்குகளுக்கு அதிக விற்பனை வேண்டும் என்ற ஆஸ்தை உண்டு. இது ஜனங்களின் வாங்கும் சக்தி அதிகமானுல்தான் சாத்தியம் என்பதும் அவனுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனல் அவன் தன் லாபத்தைக் கவனிக்க வேண்டும் என்பதும் அவனுக்குத் தெரிந்த விஷயம். மற்ற ஸ்தாபனங்களுடன் அவன் போட்டி போடவேண்டும். அவன் செலவுகள் அதிகமாக இருந்து, அவன் சரக்குகளின் விலையும் அதிகமாக இருந்தால் அவன் எப்படி முன்னுக்குவர முடியும்?

சில சமயங்களில், தொழிலாளர்களுக்கு அதிகக் கூலிக் கொடுத்து அவர்களுடைய ஸ்திதியை முன்னேற்றுவதால், ஸ்தாபனத்துக்கு நல்ல தொழிலாளர்கள் வருகிருர்கள். இதனல் ஸ்தாபனத்தின் செலவும் கொஞ்சம் குறைகிறது. ஹென்றிபோர்டு கூலியாட்களுக்கு தினத்துக்கு 5 டாலர் கூலி கொடுப்பதாக அறிக்கையிட்டபோது போர்டு தொழிற்சாலையில் இந்த முறையில்தான் வேலை நடந்தது.

"உற்பத்திசெய்யும் விலையைக்குறைக்க இதுவரையில் நான் கையாண்ட முறைகளில் 5 டாலர் கூலி கொடுப்பது மிகவும் சிறந்ததாக இருந்தது. அதைக் காட்டிலும் 6 டாலர் கூலி அதிக லாபத்தைக் கொடுத்தது. இது எவ்வளவு சரியோ எனக்குத் தெரியவில்லை ...... இதைச் சரியாக கணிக்க எங்களால் முடியவில்லை; வேறு யாராலும் முடியாது. ஏனெனில் இது ஒரு யுக்திதான். ஆனல் ஒன்று மாத்திரம் எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. நல்ல வேலைக்காரன் ஒருவனுக்குப் பதிலாக, குறைந்த கூலி வாங்கும் வேலைக்காரர்கள் 2, அல்லது 3 பேர்கள் தேவையாக இருக்கும். இதனல் நஷ்டத்தையும் குழப்பத்தையும்தான் காணலாம்" என்று ஹென்றி போர்டு சொன்னர்.

இந்த ஸ்திதியில், தொழிலாளிகளின் வேண்டுகோளில்லாமலே, முதலாளிகள் தங்கள் வேலைக்காரர்கள் கூலியை அதிகரிக்கலாம். ஆனல் கூலியைக் காட்டிலும் உற்பத்தி அளவு அதிகரித்தால் ஸ்திரத்வம் இல்லாமல் போய் விடுகிறது. இந்த முறையால் பல குறைந்த யோக்யதையுள்ள தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப் படுகிருர்கள். குறைந்த கூலியை ஒத்துக்கொண்டு மற்ற ஸ்தாபனங்களில் வேலைசெய்யவும் தயாராகிருர்கள். இதனல், தொழிலாளர்களுக்கு கூலியாகக் கிடைக்கும் தொகைக்கும் அவர்கள் உற்பத்தி செய்யும் தொகைக்கும் உள்ள வித்தியாசம் அதிகரிக்கிறது. இது ஸ்தாபனங்களை க்ஷீணிக்கச்செய்கிறது.

சில சர்க்கார் பரிசோதனைகளாலும், இன்னும் சில உன்னத முறைகளாலும், முதலாளிகளை, வேலைக்காரர்களுக்கு குறைந்த நேர வேலைக்கு அதிகச் சம்பளம் கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கலாம். ஆனல், எவ்வளவுதான் முதலாளிகள் மேற்படி முறைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தாலும், அவர்களுடன் பிறந்த உரிமையைக் கொண்டாடாமல் இருக்கமாட்டார்கள். விலையை அவர்களே நிச்சயிப்பார்கள். பிறகு அதிகரிக்கும் விலை, தேசத்து தொழிலாளியின் நிஜமான கூலியைக் காட்டிலும் குறைச்சலாக இருக்குமே யொழிய அதிகமாக இராது.

அபேதவாத முறையின்கீழ், முக்கியத் தொழில் ஸ்தாபனங்கள் எல்லாம் தேசத்துக்குச் சொந்தமானவை யாகின்றன. உற்பத்தி அதிகரிப்பதற்குத் தகுந்தாப்போல தொழிலாளிகளின் வேலை செய்யும் நேரத்தைக் குறைக்கவும், அவர்கள் கூலியை ஏற்கவும், சாத்தியமாகிறது. இதனல் உற்பத்தி செய்யும் சக்தியும், உற்பத்தி செய்த சரக்கை ஜனங்கள் வாங்கும் சக்தியும் சமமாகின்றன. இதனல் சமூகத்தின் வியாதியான வேலையில்லாமை ஒழியும்.

அபேதவாதத்தில் எல்லா ஜாதியார்களும் முதலாளிகளாகின்றனர். இவர்கள் எல்லோரும் உபயோகமாக வேலை செய்வார்கள். சௌகர்யப்படி நடந்துக்கொள்ளாதவர்கள் வேலையில்லாதவர்களாகிருர்கள். அப்படியில்லாமல், அவர்கள் வேலைசெய்யும் நேரத்தைக் குறைத்து கூலியை அதிகரித்தால், தங்கள் வேலையில் ஸ்திரமாக இருக்கிருர்கள். இதனல் அவர்கள் அதிக சௌகர்யத்தையும்; ஓய்வு நேரத்தையும் அடையலாம்.

அபேதவாத முறையில் உற்பத்தி, விற்பனை சம்பந்தமான பல சிரமமான பிரச்னைகளைக் கவனிக்க வேண்டும். தேசத்தில் எவ்வளவு உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறது, தொழில் அபிவிருத்திக்காக தேசத்தின் வருமானத்தில் எவ்வளவு எடுத்துக்கொள்ளவேண்டும், விற்பனைக்காக எவ்வளவுதொகை மறுபடியும் தொழிலாளிகளுக்குத் தரவேண்டும், என்கிற விஷயங்களை தேசத்தின் 'ஸ்டாடிஸ்டிகல் போர்டு' கணிக்கவேண்டும். தொழில், உற்பத்தி முறைகளோடு, சில சிறிய ஸ்தாபனங்களுடையதையும் கூட்டுறவு ஸ்தாபனங்களுடையதையும் சேர்க்க நேரிடும். ஸ்தல அரசாங்கமும், தேச அரசாங்கமும்; வேலையில்லாமல் திண்டாடுகிறவர்களுக்கு, ஸ்திரமான வேலை கிடைக்கிறவரையில், வேலை கொடுத்துதவ ஏற்பாடு செய்யவேண்டும்.

—ஸ்ரீ லேயிட்லர்.